Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 143 | திங்கட்கிழமை 18 ஏப்ரல் 2022 | சித்திரை 5 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ.40

விரிவான செய்திகள் உள்ளே....

- ராஜபக்சக்களை வீட்டுக்கு அனுப்ப காலிமுகத்திடலில் செய்வினை
- ஐ.எம்.எவ். உடன் பேச்சு இலங்கைக் குழு பயணம்
- ஈஸ்டர் நாளில் நீதிகோரி நாடு முழுவதும் போராட்டம்
- இலங்கைக்கு சிங்கப்பூர் ஒரு லட்சம் டொலர் உதவி
- தேசிய எதிர்ப்புத் தினம் புதனன்று கடைப்பிடிப்பு
- பாடசாலை நேரம் நீடிப்பு திடீரென ஒத்திவைப்பு
- மீண்டும் அதிகரிக்கும் மின்வெட்டு நேரம்
- மக்கள் வெள்ளத்துடன் கொழும்பு நகரும் பேரணி



தேசிய மக்கள் சக்தியால் (ஜே.வி.பி.) ஏற்பாடு செய்யப்பட்ட பேரணி பேருவளையில் நேற்று ஆரம்பமானது. நாளை கொழும்பை வந்தடையும். (ஒ.இ) (விரிவு – பக்:2)

# காலியில் நேற்று களேபரம்: அரசின் சதி ஆரம்பமா?

- 'கோத்தாகோகம' கூடாரத்தை அகற்றிய பொலிஸார்
- போராட்டக்காரர்களுடன் தர்க்கமும் மோதலும்
- மீண்டும் மிகப்பெரிய கூடாரத்தை அமைத்த போராட்டக்காரர்கள்
- விசாரணைக்கு உத்தரவிட்டது மனித உரிமைகள் ஆணைக்குழு

கொழும்பு, ஏப்ரல் 18

அரசுக்கு எதிரான போராட்டங்களை முறியடிக்க உயர்மட்ட சதியாலோசனை நடத்தப்பட்டதான தகவல் வெளிவந்து 24 மணி நேரத்துக்குள், காலியில் அமைக்கப்பட்டிருந்த 'கோத்தாகோகம' கூடாரத்தைப் பொலிஸார் பலவந்தமாகப் பிடுங்கியெறிந்து அகற்றினர். தடுக்க முனைந்த போராட்டக்காரர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் அவர்களைத் தாக்கி கூடாரத்தை அப்புறப்படுத்தினர். 15 ➤



## புலம்பெயர் தேசங்களிலும் ஓயாத போராட்டங்கள்

கொழும்பு, ஏப். 18

ராஜபக்சக்களுக்கு எதிரான போராட்டங்கள் புலம்பெயர் தேசங்களிலும் நேற்று, மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை 15 ➤

## நாடு முழுவதும் மீண்டும் போராட்டங்கள் தீவிரம்

கொழும்பு, ஏப். 18

காலிமுகத்திடல் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நாட்டில் பல்வேறு இடங்களில் முன்னெடுக்கப்பட்டு வந்த போராட்டங்கள் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் 15 ➤

## கண்டி முதல் கொழும்பு வரை மாபெரும் பாதயாத்திரை

### ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு

கொழும்பு, ஏப். 18

அரசாங்கத்தின் மக்கள் விரோதச் செயற்பாடுகளுக்கு எதிராக 15 ➤

## ஊரடங்கு வதந்தி

யாழ்ப்பாணம், ஏப். 18

இன்று ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக நாடு முழுவதிலும் நேற்று 11 ➤

## முடிகிறது இந்தியக் கடன் அதிகரிக்கும் மின்வெட்டு

கொழும்பு, ஏப். 18

இந்திய கடன் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட எரிபொருள் இந்த மாதம் 23 ஆம் திகதியுடன் முடிவ 15 ➤

## காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் தமிழ் மொழியிலும் தேசிய கீதம்

### அதற்கும் பிக்கு ஒருவர் எதிர்ப்பு

கொழும்பு, ஏப். 18

கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்று மாலை தமிழ் மொழியில் இலங்கையின் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. 11 ➤



## ஜனாதிபதி செயலகத்தை 'தெறிக்கவிட்ட' இளையோர்!

**நேற்றிரவு நூதனப் போராட்டம்**

கொழும்பு, ஏப். 18

காலிமுகத்திடலில் நேற்று 9ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போது, ஜனாதிபதி செயலகத்தில், போராட்ட வாசகங் 15 ➤

## எரிபொருள் விநியோகம் யாழில் வழமை

யாழ்ப்பாணம், ஏப். 18

கடந்த சில தினங்களாக யாழ்ப்பாணத்தில் எரிபொரு 11 ➤

## பெற்றோல், டீசல் விலை அதிகரிப்பு

15 ➤



## கொழும்பு போராட்டத்துக்கு ஆதரவு யாழில் தீப்பந்தம் ஏந்தி கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18

அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத்திடலில் நடைபெறும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, யாழ்ப்பாணம்- பண்ணை பகுதி 11 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கிக்கணக்கு ஆரம்பித்தலும் ஏக்கர் வரி அறவிடலும்

சாவகச்சேரி, ஏப். 18

சாவகச்சேரி கமநலசேவைகள் நிலையத்தால் எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கு கமநல வங்கி சேமிப்பு கணக்கு ஆரம்பித்தலும் இந்த வருடத்துக்கான ஏக்கர் வரி அறவிடலும் நாளை காலை 9 மணி தொடக்கம் எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை மண்டபத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன் கமக்கார அமைப்பால் இந்த வருட சந்தாவும் அறவிடப்படவுள்ளது. இதுவரை கமநல வங்கியில் கணக்கு ஆரம்பிக்காத அமைப்பின் உறுப்பினர்கள் இந்த வருடத்துக்கான ஏக்கர் வரி மற்றும் சந்தா ஆகியவற்றுடன் வருகை தருமாறு அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (எ-14,9)

## மின்வெட்டு நேரம் அறிவிப்பு

கொழும்பு, ஏப்.18

இன்றுமுதல் எதிர்வரும் 20ஆம் திகதிவரை மூன்று நாள்களுக்கான மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் நேரம் அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று திங்கட்கிழமை காலை 8 மணி முதல் இரவு 10.30 மணிவரை சுழற்சி முறையில் 3 மணித்தியாலயங்கள் 20 நிமிடங்கள் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

நாளை செவ்வாய்க்கிழமை மற்றும் மறுநாள் புதன்கிழமை 3 மணித்தியாலயங்கள் 20 நிமிடங்கள் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## யானைகளால் மக்கள் அச்சம்

கிளிநொச்சி, ஏப். 18

பளைப் பிரதேசத்தில் யானைகளின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுகின்றது என்று மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் கிளாலிப் பகுதி குடியிருப்புக் காணிக்குள் புகுந்த 3 யானைகள் 40 க்கும் மேற்பட்ட தென்னை மரங்களை நாசம் செய்துள்ளன. அந்த யானைகள் பொதுமக்களால் துரத்தப்பட்டன. இந்நிலையிலேயே பளைப் பிரதேசத்தில் ஊடுருவும் யானைகளால் மக்கள் அச்சத்துடன் காணப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-14,9)





உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் இறந்தவர்களுக்கு நீதிகேட்டு இறந்தவர்கள் போன்று உடையணிந்த குழுவொன்றால் புதுக்கடையில் இருந்து காலிமுகத்திடல் வரையில் நேற்று அமைதியான முறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (எ-இ)

# 'மக்களை வதைக்கின்ற அரசை விரட்டியடிப்போம்'

### பாதயாத்திரை நேற்று ஆரம்பம்



**கொழும்பு, ஏப்.18**

**'மக்களை வதைக்கின்ற அரசை விரட்டியடிப்போம்' என அறைகூவல் விடுத்து, தேசிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்ட பாதயாத்திரை நேற்று முற்பகல் களுத்துறை, பேருவளை நகரில் ஆரம்பமானது.**

ஜே.வி.பி.தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க உட்பட தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்களும், பெருந்திரளான மக்களும் குறித்த பாதயாத்திரையில் பங்கேற்றிருந்தனர்.

'போ' என்றதும், விடைபெறமறுக்கும் திருட்டு ஊழல் கும்பலை, மக்கள் சக்தியால் விரட்டியடிப்போம் எனப் பாதயாத்திரையில் பங்கேற்றோர் கோஷம் எழுப்பினர்.

"தேசிய மக்கள் சக்தியால் பாத யாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டாலும், இது மக்களுக்கான போராட்டமாகும். எனவே, அனைவரும் கட்சி பேதமின்றி அணிதிரள வேண்டும்." என்று ஜே.வி.பியின் செயலாளர் நாயகம் தோழர் ரில்வின் சில்வா அழைப்பு விடுத்துள்ளார். இந்தப் பாதயாத்திரை 19ஆம் திகதி கொழும்பைச் சென்றடையவுள்ளது. (எ-இ)

## காட்டு யானைகளால் வாழ்வாதாரம் பாதிப்பு

கிளிநொச்சி, ஏப். 18

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மயில்வாகனம் பகுதியில் காட்டுயானைகளால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மூன்று காட்டு யானைகள் மக்கள் குடியிருப்புக்குள் புகுந்து 15க்கும் மேற்பட்ட தென்னை மரங்களையும் 50க்கும் மேற்பட்ட வாழைமரங்களையும் அறுவடைக்குத் தயார் நிலையில் இருந்த மரவள்ளிக்கட்டைகளையும் அழித்து துவம்சம் செய்துள்ளன.

அந்தப் பகுதியில் கடற்றொழிலாளர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர். அவர்கள் நாளாந்தம் தமது வாழ்வாதாரத்துக்கு கடலுக்குச் செல்ல வேண்டியுள்ளது. ஆனால் இரவுவேளைகளில் கடலுக்குச் செல்லும் இருபகுதியிலும் காட்டு யானைகள் நடமாட்டம் காணப்படுவதால் தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் வீடு திரும்பிச் செல்கின்ற நிலை காணப்படுகின்றது.

அதனாலேயே தமது வாழ்வாதாரம் நாளாந்தம் பாதிக்கப்படுகின்றது. எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மக்கள் மேலும் தெரிவித்தனர். (எ-14-113)

## மாட்டை இறைச்சியாக்கிய குற்றச்சாட்டில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 18

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் - பெரியபுலோ பகுதியில் மாட்டை இறைச்சியாக்கிய குற்றச்சாட்டில் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், மாட்டின் தலையுடன் இறைச்சிகள் துண்டாக்கப்பட்ட நிலையில் 40 கிலோ இறைச்சியைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 19 வயதான இளைஞனும் 43 வயதான குடும்பஸ்தரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் இருவருக்கு எதிராகவும் மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-14,125,26)

## இரசாயன உர இறக்குமதிக்கு 700 மில்லியன் டொலர் கடன்!

கொழும்பு, ஏப்.18

சிறுபோகத்துக்கு இரசாயன உரங்களை இறக்குமதி செய்ய உலக வங்கியிடமிருந்து 700 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் கோரப்பட்டுள்ளது என விவசாய அமைச்சின் செயலாளர் டி.எம்.எல். பண்டாரநாயக்க கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

பெரும்போகத்தில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்குப் பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட விவசாய இரசாயனங்கள் மற்றும் விதைகளை வழங்கி விவசாயத்துறைக்கு புத்துயிர் அளிக்க அரசாங்கம் உலக வங்கியிடம் 700 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைக் கோரியுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கான கடன் கடிதங்களைத் திறக்கத் தனியார் துறைக்கு உதவ இந்தக் கடன் பயன்படுத்தப்படவுள்ளது. தற்போது நடைபெற்றுவரும் சிறுபோகத்துக்கும் ஒரு வருட காலப் பகுதியை உள்ளடக்கிய எதிர்வரும்பருவத்துக்கும் இந்த நிதி கோரப்பட்டுள்ளது.

அதேவேளை, இரசாயன உரங்களை வழங்கும் அதேவேளையில், கரிம உரங்களைப் பயன்படுத்துவதை ஆதரிக்கும் கொள்கையை அமைச்சகம் தொடரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியாக நடக்கும் போராட்டத்தில் இராணுவம் ஒருபோதும் தலையிடாது!

## இலங்கை இராணுவம் தெரிவிப்பு

**கொழும்பு, ஏப்.18**

**அரசுக்கு எதிராக நடைபெற்றுவரும் அமைதியான போராட்டங்களில் தலையிடமாட்டோம் எனவும், அரசமைப்புச் சட்டத்தை முழுமையாகப் பாதுகாப்போம் எனவும் இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.**

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்பேற்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி, ஜனாதிபதி செயலகம் அருகே பொதுமக்கள் தன்னெழுச்சியாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த, 9ஆம் திகதி தொடங்கிய இந்தப் போராட்டம் தொடர்ந்து 9ஆவது நாளாகவும் இடம்பெற்று வருகிறது.

இந்தநிலையில், போராட்டத்தை ஒடுக்க இராணுவத்தை அரசு பயன்படுத்தக்கூடும் என சமூக ஊடகங்களில் தகவல் பரவியது. போராட்டத்தை ஒடுக்கும் சட்ட விரோத உத்தரவுகளுக்கு இராணுவம் பணியக்கூடாது என முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, இராணுவம் சார்பில் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதில், "அமைதியான போராட்டங்களில் இராணுவம் தலையிடாது. பொலிஸார் உதவி கோரினால் மட்டும் தலையிடுவோம். அதே வேளையில் அரசுக்கு எதிராகவும் இராணுவம் செயற்படவில்லை. அரசமைப்புச் சட்டத்தை இராணுவம் முழுமையாகப் பாதுகாக்கும். போராட்டத்தை ஒடுக்க இராணுவம் வன்முறையில் ஈடுபடுவதாக வெளியான தகவலும் தவறானது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

கொழும்பு,ஏப்.18

அனைத்துப் பாடசாலைகளிலும், 2022 ஆம் கல்வி ஆண்டுக்கான முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதேவேளை, பாடசாலை நேரத்தை மேலும் ஒரு மணித்தியாலத்துக்கு அதிகரிக்கும் யோசனை தற்காலிகமாகக் கைவிடப்பட்டது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (க-இ)

## 2022 முதலாம் தரத்துக்கு மாணவர்கள் இணைப்பு

கொழும்பு, ஏப்.18

2022 ஆம் ஆண்டுக்கான முதலாம் தரத்துக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடைமுறை நாளை ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அனைத்து அரச பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் பாடசாலைகள் தொடர்பான மேலதிக செயலாளர் லலிதா எகொடவெல தெரிவித்துள்ளார். (க-இ)

## பொழுதுபோக்குக்காகவே காலியில் சேர்ந்துள்ளனர்

### கெஹலிய தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.18

காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டுவரும் ஆர்ப்பாட்டத்தில் எந்த நோக்கமும் இல்லை.

இளைஞர்கள் பொழுதுபோக்குக்காக அங்கு கூடி மகிழ்ச்சியாகவே நேரத்தைச் செலவிடுகின்றனர் என்று முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கத்துக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மை இல்லை என்று காண்பிப்பதே எதிர்க்கட்சியின் கடமை. பெரும்பான்மை இல்லாத சூழ்நிலையேற்பட்டால் நாங்கள் எதிர்க்கட்சியை நோக்கிச் செல்லவும் தயார். 'கோத்தா கோ ஹோம்' என்பதன் அர்த்தம் புரியவில்லை. ஜனாதிபதி பதவி விலகினால் ஆட்சிப்பொறுப்பை யார் ஏற்பது? போன்ற விடயங்கள் குறித்து அவர்கள் தெளிவுபடுத்தவில்லை. எந்த அரசியல்வாதியும் நாட்டை வேண்டுமென்றே வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்போவதில்லை. தவறுகள் இடம்பெற்றுள்ளன. அதனைத் திருத்துவதற்கு அரசாங்கம் முயல்கின்றது.

ஆட்சிக் கட்டமைப்பு இல்லாமல் நாட்டைப் பின்னோக்கிச் செல்ல அனுமதிக்க முடியாது. காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டம் போன்று இல்லாமல் ஆர்ப்பாட்டங்கள் அர்த்த பூர்வமானவையாக இருக்க வேண்டும்-என்றார். (க-இ)

# எரிபொருள், எரிவாயு நெருக்கடி: புதிய அமைச்சரவையில் தீர்வு

கொழும்பு, ஏப்.18

புதிய அமைச்சரவை நியமனத்தின் பின்னர் எரிபொருள் மற்றும் எரிவாயு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே அரசாங்கத்தின் பிரதான நோக்கம் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எரிபொருள் பிரச்சினை தொடர்பில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிரதானிகள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களுடன் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச விசேட கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளார்.

எரிபொருள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான யோசனைகள் மற்றும் ஆலோசனைகளைப் பெறுவதே இந்தக் கலந்துரையாடலின் முக்கிய நோக்கம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-இ)




முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை எப்பிடி அனுஷ்டிக்கிறதெண்டு முல்லைத்தீவில நேற்றொரு கூட்டம் நடந்திருக்கு. அந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விட்டது ஆரெண்டு தெரியுமோ? சைக்கிள் கட்சிதான். வழக்கமா எல்லாரும் கிழக்கை ஓடினால், தாங்கள் மட்டும் மேற்கால ஓடோணும் எண்டு நிக்கிறவை இந்தச் சைக்கிள்காரர். அதை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலிலையும் அவை கைவிடேலை. எல்லாச் சனமும் பகலில முள்ளிவாய்க்கால் தூபி இருக்கிற இடத்தில தீபமேத்தி நினைவேந்தினால், இவையள் பின்னேரத்தில கொஞ்சம் அங்கால தள்ளிப்போய் தீபமேத்துறவை. நினைவேந்தலில கூட ஒற்றுமையா நிக்காமல், தனித்தவில் அடிக்கிறவை, இந்தமுறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்காக எல்லாப் பொது அமைப்புகளையும் கூப்பிட்டது எல்லாருக்கும் ஆச்சரியமாத்தான் இருந்தது.ஆனால் கூட்டத்துக்கு போன பிறகுதான் சைக்கிள்காரர் ஏன் இப்பிடி கூப்பிட்டவை எண்டு எல்லாருக்கும் விளங்கிச்சுது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைச் செய்யிறதுக்கு ஒரு ஏற்பாட்டுக்குழு இருக்குது. ஒவ்வொரு வருசமும் அந்த ஏற்பாட்டுக்குழுதான் இவ்வளவு பிரச்சினைக்குள்ளையும் நினைவேந்தலை நடத்தினது. ஆனால் இந்த வருசம் சைக்கிள்காரர் தாங்கள் தலைப்பாகை கட்டி, நினைவேந்தலைச் செய்ய பிளான் போட்டிருக்கினம். அதால 'பின்னேரம் தான் நாங்கள் நினைவேந்துவம்' எண்ட விசயத்தை தூக்கி அங்கால வைச்சிட்டு, பொது அமைப்புக்களை வைச்சு, தங்கட தலைமையில புதிசா ஒரு ஏற்பாட்டுக்குழுவை உருவாக்கிறதுதான் சைக்கிள்காரரின்ர நேற்றைய கூட்டத்தின்ர நோக்கம். 'முந்தின ஏற்பாட்டுக்குழு அக்டிவ் இல்லாமல் இருக்கினம். அதால புதிசா ஒரு ஏற்பாட்டுக்குழுவை அமைப்பம்' எண்டு ஒரு சிலர் சொல்லிச்சினம். ஆனால் "அப்பிடி அவை செயற்பாடு இல்லாமல் இருக்கேலையே. இண்டைக்கு ஈஸ்டர் எண்டதால அவையில சிலர் வரேலை. அவையோட கதைக்காமல் எப்பிடி புதுசா ஒரு ஏற்பாட்டுக்குழுவை நியமிக்க ஏலும்?" எண்டு அங்க வந்திருந்த பொதுஅமைப்புகளின்ர பிரதிநிதியள் குழம்பத் தொடங்கிட்டினம். இதைக் கஜா ரீம் எதிர்பார்க்கேலை.

'இந்தமுறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில எங்களுக்கு சமஷ்டிதான் வேணுமெண்டதையும் வலியுறுத்தோணும்' எண்டு தூண்டிலைப் போட்டிச்சினம் கஜா ரீம்காரர்.

'அப்பிடி சமஷ்டி தான் வேணும் எண்டு நீங்கள் எப்பிடி முடிவெடுக்கலாம்? இவ்வளவு பேரும், இவ்வளவு சனமும் செத்தது சமஷ்டிக்காக இல்லை. தமிழீழத்துக்காகத்தான். தமிழருக்கு என்ன தீர்வு வேணும் எண்டதை மக்கள் தான் தீர்மானிக்கவேணும். அதுக்கு ஒரு பொதுவாக்கெடுப்பு நடத்தோணும். அதோட இது ஒரு நினைவேந்தல் . இதுக்க உங்கட அரசியலைத் திணிக்காதையுங்கோ'

எண்டு வேலன் சுவாமி தொடங்கி வைக்க,எல்லாரும் அதுக்கு சப்போர்ட்டா கதைக்கத் தொடங்க கஜா ரீமுக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேலை. 'இது எங்கட கட்சியால ஒழுங்கு செய்த கூட்டம். நீங்கள் எல்லாம் வெளியில போங்கோ' எண்டு கலைக்காத குறையா சொல்லிப்போட்டு, கதிரையளை அடுக்கத் தொடங்கிட்டினம். அவையின்ர அழைப்பை நம்பி, அம்பாறை, மட்டக்களப்பு எண்டு தூர இடத்தில இருந்து வந்தவையெல்லாம் 'நினைவேந்தலுக்கு என்ன செய்யிறதெண்டு ஒரு முடிவுகூட எடுக்காமல், தங்கட அரசியலைக் கதைக்கவோ கூப்பிட்டவை?' எண்டு புறுபுறுத்துக்கொண்டு வெளிக்கிட்டவையாம். செத்தவீட்டிலையும் அரசியல் செய்ய வெளிக்கிடுறவையால ,

ஒரு நினைவேந்தலைக்கூட ஒழுங்காய் செய்ய முடியாமல் சீரழியிறம் பாருங்கோ.



- பட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# நல்லூர் ஆலயத்தைச் சுற்றி வேற்றுமதச் சுவரொட்டிகள்

*சிவசேனை அமைப்பு கண்டனம்*

யாழ்ப்பாணம், ஏப்.18
நல்லூர் ஆலயத்தின் புனிதத் தன்மைக்கு குந்தகம் விளைவிக்கும் விதமாக ஆலயத்தைச் சுற்றி வேற்றுமதச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ள சிவசேனை அமைப்பு அதற்குக் கண்டனம் வெளியிட்டுள்ளது.

நல்லூர் ஆலயத்தைச் சுற்றி சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன என்று தகவல் கிடைத்ததை அடுத்து, எமது அமைப்பைச் சார்ந்த இளைஞர்கள் ஒன்று கூடி குறித்த சுவரொட்டிகளை ஒட்டியவர்களைத் தேடினோம். எனினும் ஒட்டியவர்கள் எம் கைகளில் சிக்கவில்லை. சுவரொட்டிகள் கிழிக்கப்பட்டு அதே இடத்தில் தீக்கிரையாக்கப்பட்டன.

சித்திராப்பௌர்ணமி நன்னாளில் இந்துக்கள் பெருமளவில் ஆலயத்துக்குச் செல்லும்போது, இவ்வாறான கீழ்த்தரச் செயல்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அமைப்பு தெரிவித்துள்ளது. (க-27)

# திருட்டு ஆட்சி விரட்டப்படும்!

*எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ஆவேசக்கருத்து*



**கொழும்பு, ஏப். 18**

**நாட்டில் ஊழலும் திருட்டும் தலைதூக்கியுள்ள கொடூரமான ஆட்சியை விரைவில் அகற்றுவோம் என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் அரச சொத்துக்களை, அரச வளங்களை குடும்பமொன்று கொள்ளையடிக்கின்றது.
மக்களை அந்தக் குடும்பம் பலிக்கடா ஆக்குகின்றது. அத்தகைய ஒரு நாடு ஓர் அங்குலம் கூட முன்னேறாது.
இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அழிவுகளுக்கு இந்தக் குடும்ப அரசாங்கமே முழுப்பொறுப்பு.
இவர்களால் கொள்ளையடிக்கப்பட்டு பல்வேறு நாடுகளில் மறைத்து வைக்கப்பட்ட பணம் அனைத்தும் கண்டிப்பாக மீட்கப்படும். அத்தகைய திருடர்களுக்குத் தண்டனை வழங்குவது துல்லியமாக நிறைவேற்றப்படும்.
நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் நிச்சயமாக மேற்கொள்ளப்படும். இந்த நாட்டில் அரசாங்கத்துக்கு எதிராகப் போராடும் அனைத்து மக்களின் பெயராலும் இவை நிறைவேற்றப்படும் - என்றார். (ம)

# மண்வெட்டியால் தாக்கி குடும்பஸ்தர் கொலை

கொழும்பு,ஏப்.18
குடும்பத் தகராறு காரணமாக, குடும்பஸ்தர் ஒருவர் மண்வெட்டியால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் மஹவெல - தெல்கொல்லப் பிரதேசத்தில் நடந்துள்ளது.
உயிரிழந்தவரின் மனைவியின் முன்னாள் கணவரின் மகன் அவரைத் தாக்கி விட்டு, தப்பிச் சென்றுள்ளார். படுகாயமடைந்த நபர் மாத்தளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.
உயிரிழந்தவர் 55 வயதுடைய தெல்கொல்ல- கனேகெதரவத்தைப் பகுதியைச் சேர்ந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். சந்தேகநபரைக் கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளை மஹவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

# பதவி விலகிய அமைச்சர்கள் ஏன் அரசுடன் ஒட்டுகின்றனர்?

*ராஜித சேனாரத்ன கேள்வி*

கொழும்பு, ஏப். 18
"நாட்டின் நலன்கருதி அனைவரும் அமைச்சுப் பதவிகளைத் துறந்துவிட்டோம் என்று கூறிவரும் முன்னாள் அமைச்சர்கள், ஏன் அரசிலிருந்து வெளியேறாமல் ராஜபக்சக்களுடன் ஒட்டிக் கொண்டு இருக்கின்றார்கள்? ராஜபக்சக்களை இன்னமும் நம்புகின்றீர்களா என்று அவர்களிடம் கேள்வி கேட்க விரும்புகின்றேன்" இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
அவர் மேலும் கூறுகையில்,
நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைமைக்கு ராஜபக்சக்கள் மட்டுமன்றி முன்னாள் அமைச்சர்களும் பொறுப்புக்கூற வேண்டும். ஏனெனில் தீர்மானங்களை எடுக்கும் அமைச்சரவையில் அவர்களும் அங்கம் வகித்தவர்கள். பதவி ஆசைக்காக ராஜபக்சக்களின் கால்களில் அவர்கள் விழுந்தவர்கள். எனவே, கூட்டுப் பொறுப்பை அவர்கள் ஏற்கவேண்டும்' - என்றார். (ம-22)


# நாட்டு நிலைமைகளைக் கையாள அமைச்சரவைக்கு நிபுணர்கள் குழு

*கலாநிதி ஜயம்பதி வலியுறுத்து*

பொருளாதார மற்றும் சர்வதேச விவகாரங்களைக் கையாளக்கூடிய நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றை, அமைச்சரவையுடன் இணைத்து நாட்டின் இன்றைய நிலைமைகளைக் கையாள வேண்டும் என்று கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன வலியுறுத்தியுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்க இப்போதும் எம்மிடம் மாற்று வேலைத்திட்டங்கள் உள்ளன. அவற்றைக் கையாளத் தாமதிக்கக்கூடாது.
ராஜபக்சவினர் சுயமாக ஆட்சியை விட்டு வெளியேறினால், அடுத்ததாக என்ன செய்வது என்பது குறித்து ஆராய்ந்து புதிய பயணத்தை முன்னெடுக்கமுடியும். அல்லது நாடாளுமன்றத்தில் இதனைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.
எதிர்கட்சியினர் மற்றும் சுயாதீன அணியினர் இணைந்து அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர வேண்டும். அதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவருவது இலகுவான காரியம் அல்ல. அதற்கு நீண்ட காலம் எடுக்கும். குற்றப்பிரேரணை கொண்டு வரப்பட்டால் அரைவாசிப்பேர் கையொப்பமிட வேண்டும் அல்லது மூன்றில் ஒரு தரப்பு கையொப்பமிட்டால் கொண்டுவரப்பட்ட குற்றப்பிரேரணையில் உள்ள குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவை என்பதை சபாநாயகர் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளவேண்டும்.
ஆகவே இவை இலகுவாக செய்து முடிக்கக்கூடிய விடயங்கள் அல்ல. எனவே நாட்டின் பொதுவான கோரிக்கைக்கு செவிமடுத்து, மக்களின் ஆணை என்ன என்பதைக் கருத்தில் கொண்டு தாமாக பதவி விலக வேண்டும்.
மக்கள் அதிருப்தியில் உள்ளனர். ஆகவே பலமிழந்த அரசாங்கத்துடன் இனியும் எவரும் கலந்துரையாடமாட்டார்கள். எனவே மாற்று அரசாங்கத்தை தற்காலிகமாக ஏற்படுத்தி, குறுகிய அமைச்சரவையை உருவாக்கி நிபுணர்களுடன் இணைந்து இயங்கக்கூடிய பொறிமுறையை ஏற்படுத்திப் பயணிக்க வேண்டும்.
நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கி, பொறுப்புக்கூறல் விடயங்கள், நல்லிணக்க விடயங்கள், ஜனநாயகத்தைப் பலப்படுத்தும் விடயங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவதே இன்றைய நெருக்கடிகளுக்குத் தீர்வாகும்-என்றார். (க-இ)

# ரயிலுடன் மோதி தந்தை, மகன் சாவு!


கொழும்பு,ஏப்.18
மோட்டார் சைக்கிளில் ரயில் கடவையைக் கடந்த தந்தையும், மகனும் ரயில் மோதியதில் உயிரிழந்தனர். இந்த விபத்து பம்பலப்பிட்டி, வெலிவத்த ரயில் கடவையில் நடந்துள்ளது.
விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 41 வயதுடைய தந்தை மற்றும் அவரது 15 வயதுடைய மகன் ஆகியோர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)



# இலங்கைக்கு மருத்துவ உதவி: சிங்கப்பூரால் 100,000 டொலர்

கொழும்பு,ஏப்.18
இலங்கையின் அவசர அடிப்படை மருந்துப் பொருள்கள் விநியோகத்தை மேற்கொள்ள, ஒரு லட்சம் அமெரிக்க டொலரை வழங்க சிங்கப்பூர் அரசாங்கம் முன்வந்துள்ளது.
சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாகத் திரட்டப்பட்ட நிதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.
இலங்கை மருத்துவமனைகளில் தற்போது நிலவும் மருந்துப் பொருள்களுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய இந்த நிதி உதவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தவக்காலத்தின் நிறைவு நாளை முன்னிட்டு யாழ். மரியன்னை பேராலயத்திலும் உயிர்த்தஞாயிறு கூட்டுத்திருப்பலி நேற்றுக் காலை நடைபெற்றது.
இதேவேளை- "இயேசுபிரான் காட்டிய வாழ்வியல் பாடங்கள்" என்னும் தலைப்பில் சிறப்பு கூட்டுப்போதனையும் இடம்பெற்றது. (ய-27)




# நாடளாவிய ரீதியில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு வழிபாடுகள்

**யாழ்ப்பாணம், ஏப்.18**

**நாடளாவிய ரீதியில் பல பகுதிகளிலும் இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா திருப்பலி சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன.**

வழிபாடுகளில் பெரும் எண்ணிக்கையானவர்கள் கலந்துகொண்டனர்.
இயேசு கிறிஸ்து உயிர்த்ததை நினைவுகூரும் உயிர்த்த ஞாயிறு ஈஸ்டர் பெருவிழாவாகக் கிறிஸ்தவ மக்கள் கொண்டாடி வருகின்றனர்.
யாழ். மரியன்னை பேராலயத்தில் நேற்றுக்காலை உயிர்த்த ஞாயிறு கூட்டுத்திருப்பலி இடம்பெற்றது.
யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய தேவாலயங்களிலும் வழிபாடுகள், திருப்பலிகள் முன்னெடுக்கப்பட்டன.
கிளிநொச்சியிலுள்ள அனைத்து தேவாலயங்களிலும் விசேட திருப்பலி வழிபாடுகள் இடம்பெற்றன. வழிபாடுகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டனர்.
இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா திருப்பலி மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் நேற்றுமுன்தினம் இரவு 11.15 மணிக்கு இடம்பெற்றது.
மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து திருவிழா திருப்பலி கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.
மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான வழிபாடு மட்டக்களப்பு புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணிக்கு ஆலய விளக்குகள் அணைக்கப்பட்டு புதிதாக தீமூட்டி மெழுகுவர்த்தி ஏற்றி உயிர்த்த ஞாயிறு வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை தலைமையில் அருட்தந்தையர்களால் இந்த உயிர்த்த ஞாயிறு விசேட வழிபாடுகள் நடத்தப்பட்டன. (எ-இ)

## புதிய சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு ஆராதனை

மட்டக்களப்பு, ஏப்.18
மட்டக்களப்பு- மென்ரசா வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு விசேட ஆராதனைகள் நேற்று இடம்பெற்றன. இதில் நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்கள் இதில் கலந்துகொண்டனர்.
2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறன்று சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 31 பேர் உயிரிழந்ததுடன், 93 பேர் படுகாயமடைந்திருந்தனர். இதில் தேவாலயமும் சேதமடைந்தது. சம்பவம் இடம்பெற்று 3 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. மீண்டும் தேவாலயம் புதிதாக அமைக்கப்பட்டது. அங்கு நேற்று விசேட வழிபாடுகள் இடம்பெற்றன. இதில் குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களுக்கும் பிரார்த்தனை செய்யப்பட்டது. (க-இ)

## ஈஸ்டர் வழிபாட்டின் பின் கவனவீர்ப்பு போராட்டம்

அம்பாறை, ஏப்.18
கல்முனை திரு இருதயநாதர் ஆலயத்துக்கு முன்பாக, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு நீதி கோரி, வழிபாட்டின் பின் மக்கள் நேற்றுக் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.
இதில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பி, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு நீதி வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். "கர்தினாலின் குரலுக்குச் செவிசாயுங்கள், இனவாதம் காட்டி உறவுகளைப் பிரிக்காதீர்கள். இறந்து போனவர்களுக்கான கண்ணீர் அஞ்சலி, இறந்து போனவர்களுக்கு நீதி வேண்டும், இனவாதம் காட்டி எங்களைப் பிரிக்காதீர்கள், பயங்கரவாதத்தை நிறுத்துங்கள், அரசன் அன்று கொல்வான் இறைவன் நின்று கொல்வான்" உள்ளிட்ட பல்வேறு சுலோகங்களையும் பதாகைகளையும் தாங்கி, கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (க-இ)

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நினைவாக காலிமுகத்திடலில் கண்டன ஆர்ப்பாட்டம்




கொழும்பு, ஏப்.18
நாட்டில் நிகழ்த்தப்பட்ட உயிர்த்த ஞாயிறுத் தினத் தாக்குதலை நினைவு கூர்ந்து, காலிமுகத்திடலில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.
குறித்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு, 3 வருடங்கள் கடந்துவிட்டன. எனினும் தாக்குதலுக்கு நீதி கிடைக்கவில்லை.
உயிர்த்த ஞாயிறை முன்னிட்டு நாடளாவிய ரீதியிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட திருப்பலிகள் நேற்று இடம்பெற்றன. இந்தநிலையில், கொழும்பு காலிமுகத்திடத்தில் கோட்டா கோகவில், 'நீதிக்காக அழுகின்றோம்' எனும் தொனிப்பொருளில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் புதனன்று தேசிய எதிர்ப்பு தினம்



கொழும்பு, ஏப்.18

**நாடு முழுவதும் நாளைமறுதினம் புதன்கிழமை தேசிய எதிர்ப்பு தினத்தை அறிவித்து, வேலைத்தளங்களில் தொடர் வேலை நிறுத்தத்துக்காக உழைக்கும் மக்களை அணிதிரட்டுவதற்கு தொழிற் சங்கங்கள் தீர்மானித்துள்ளன.**

இலங்கையில் உள்ள அனைத்துத் தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் கூட்டமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து இதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று சுகாதார வல்லுநர்கள் ஒன்றியத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டுவரும் மக்கள் போராட்டத்தின் வெற்றிக்கு நிபந்தனையற்ற பங்களிப்பை வழங்க தொழிற்சங்கங்களும், வெகுஜன அமைப்புகளின் கூட்டமைப்பும் தீர்மானித்துள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)



கோத்தாபய ராஜபக்ச மற்றும் அரசாங்கத்தைப் பதவி விலகக் கோரி காலிமுகத்திடலில் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், நேற்றுமுன்தினம் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்காக மாந்திரீக பூஜை வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. பில்லி, சூனியம் செய்வதற்கென்று மாத்தறையில் இருந்து வந்த ஒருவர் விசேட பூஜை வழிபாடுகளை செய்துள்ளார்.

## காலிமுகத்திடல் போராட்டத்துக்கு ஐ.ம.சக்தி எம்.பிக்களும் ஆதரவு

கொழும்பு, ஏப்.18

அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் பதவி விலகுமாறு கோரி காலிமுகத்திடலில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்துக்கு, ஐக்கிய மக்கள் சக்தியின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, முஜிபுர் ரஹ்மான், காவிந்த ஜயவர்தன மற்றும் ஹெக்டர் அப்புஹாமி ஆகியோர் போராட்டத்தில் இணைந்து கொள்ளத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளனர். அரசியல் கட்சி பேதங்களை மறந்து, தேவை எழுந்தால் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களுடன் இணைந்து கொள்ள நாம் தயாராகவுள்ளோம் என்று ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

போராட்டத்தில் ஈடுபடுவோரை அடக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமாயின், போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுடன் கைகோர்ப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் ஒடுக்குமுறையான செயற்பாடுகளைக் கண்டு சளைக்க வேண்டாம் என்று போராட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் அவர் உத்வேகமளித்துள்ளார். (க-இ)



## அச்சமின்றி போராடுங்கள்

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.18

காலிமுகத்திடலில் இளைஞர்கள் முன்னெடுத்துள்ள ஆர்ப்பாட்டம் காரணமாக அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் வீடுகளுக்குள் முடங்கியிருக்கவேண்டிய நிலையேற்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசியல் ரீதியான நோக்கங்கள் மனதில் இல்லாதபோதிலும் அவர்களுக்கு எந்த உதவியையும் செய்யத் தயார் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

தற்போது மறைந்துவாழும் ராஜபக்சக்கள் தொடர்பாக ஆர்ப்பாட்டக்காரர்கள் அச்சப்படத் தேவையில்லை என சமூக ஊடகத்தில் காணொலிப் பதிவின்மூலம் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் மனுச நாணயக்கார மக்கள் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் தங்கள் கருத்துக்களை வெளியிட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். சவால்கள் பல காணப்படுகின்றபோதிலும் அச்சமின்றி போராட்டத்தை முன்னெடுப்பதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார். (எ-இ)

## உணவு விநியோகத்தைத் தடுத்து போராட்டத்தைக் குழப்ப முயற்சி?

கொழும்பு, 18

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தை பதவி விலக வலியுறுத்தி காலிமுகத்திடலில் போராட்டம் நடத்தப்படும் இடத்துக்கு உணவு உட்பட அத்தியாவசியப் பொருள்களை பெருமளவில் விநியோகிக்கும் நபர்களைக் கண்டறிய குற்றவியல் விசாரணைத் திணைக்களம் நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அண்மையில் போராட்டக்காரர்களுக்கு உணவு விநியோகித்தார் என்று கூறப்படும் கனேடிய கடவுச்சீட்டை கொண்டுள்ள நபர் ஒருவரைக் குற்றவியல் விசாரணைத்திணைக்களம் தேடிவருகின்றது என்று கூறப்படுகிறது.

தனது துணைவியின் வழியாக அவர் கடந்த 2021 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்தார் என்றும், 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டு காலத்தில் நடந்தது என்று கூறப்படும் பணச்சலவை சம்பந்தமான குற்றச்சாட்டு தொடர்பில் அவருக்கு எதிராக சர்வதேச பொலிஸார் பிடியாணை பிறப்பித்துள்ளனர் என்றும் கூறப்படும் நிலையில், இந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு சம்பந்தப்பட்ட நபரை கைதுசெய்ய குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தினர் தயாராகி வருகின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆயினும் தமது எதிர்ப்புப் போராட்டத்தை சீர்குலைக்கும் திட்டமாக போராட்டக் களத்துக்கு கிடைத்து வரும் விநியோகத்தை நிறுத்தவும் மக்களை அச்சுறுத்தும் உள்நோக்கத்திலும் அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகப் போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பட்டும் திருந்தாத திட்டங்கள்

'இதுவே என் கட்டளை. என் கட்டளையே சாசனம்' – பாகுபலி படத்தில் இராஜமாதா சொல்கின்ற இந்த வசனம் மிகப்பிரபலம். ஆட்சியில் இருப்பவர்களின் அறிவிப்புக்கள், அந்த நாட்டு மக்களுக்கு எந்தக்காலத்திலும் மாற்றப்பட முடியாத வேதவாக்காகவே இருக்கும். அதனால் தான் முன்னைய காலங்களில் அரசர்களின் அறிவிப்புக்கள் 'கல்வெட்டுக்களாக' பொறிக்கப்பட்டன. அப்படி எந்தக்காலத்திலும் மாற்றமுடியாத அறிவிப்பை விடுப்பதற்கு முன்னர் அதுபற்றி தனது அமைச்சர்கள், பிரதானிகளோடு அரசர்கள் பெரும் ஆலோசனை நடத்தி, அதன் சாதக, பாதகங்களை ஆராய்வது வழக்கம். இப்படியெல்லாம் அலசி, ஆராய்ந்த பின்னரே அது அரசகட்டளையாக மாறும். அப்போதுதான் அது எந்தவிதக் குறையுமில்லாத திட்டமாக இருக்கும்.


பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த அரசர்களுக்கே இருந்த இந்தத் தெளிவு, இப்போது இலங்கையில் ஆட்சியில் இருப்பவர்களுக்கு கிஞ்சித்தும் இல்லை. அதனால்தான் இலங்கையின் வரலாற்றிலேயே அதிகமான திட்டங்களை அறிவித்து, பின்னர் அவற்றை விலக்கிக்கொண்ட அரசாங்கமாக ராஜபக்சக்களின் ஆட்சி சாதனை படைத்திருக்கிறது. கனவு கண்டவுடன் திடுக்கிட்டு– எழுந்துவிட்டு, வாய்க்கு வந்ததை உளறுவதைப்போல, இந்த அரசாங்கமும் நாட்டுக்கு பொருத்தமேயில்லாத ஏதேனும் ஒரு திட்டத்தை திடீரென அறிவிக்கும். உடனடியாகவே அந்தத் திட்டம் வர்த்தமானி மூலமும் பிரசுரிக்கப்பட்டு, அந்த உத்தரவின் கனதி அதிகமாக்கப்படும். 'இப்படியெல்லாம் முட்டாள்தனமாக ஒரு அரசாங்கம் யோசிக்க முடியுமா?'என்று மக்கள் யோசிக்குமளவுக்கு அந்தத் திட்டங்கள் இருக்கும். பின்னர் அதுகுறித்த எதிர்ப்புகள் நாலாபுறத்தில் இருந்தும் கிளம்பிவர, மெல்ல மெல்ல தாங்கள் அறிவித்த திட்டத்தில் இருக்கும் ஓட்டைகள் அரசாங்கத்துக்குத் தெரியவரும். பின்னர் அந்தத் திட்டத்தை இரத்துச் செய்து இன்னொரு வர்த்தமானி அறிவிப்பு வெளியாகும். இப்படி ஒரு உத்தரவை வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்துவதும், பின்னர் அதனை இன்னொரு வர்த்தமானி மூலம் இரத்துச் செய்வதும் இந்த அரசாங்கத்துக்கு மிகப்பிடித்தமான பொழுதுபோக்காகவே மாறிவிட்டது. அந்த வரிசையில் அண்மையில் இணைந்து கொண்டதுதான், 'பாடசாலை நேரத்தை ஒரு மணித்தியாலத்தால் அதிகரிக்கும்' திட்டம்.

கொரோனா கால ஊரடங்குகள், முடக்கல்கள் என்பவற்றால் கடந்த இரு வருடங்களாக பாடசாலைகள் சீராக இயங்கவில்லை. இதனால் மாணவர்களின் கற்றல் நேரத்தில் பெரும் வெட்டு நிகழ்ந்தது. 'சூம்' செயலிமூலம் இணையவழிக் கற்கைகள் நடந்தாலும், அவை உரியவகையில் மாணவர்களிடத்தில் சென்றுசேர்ந்தனவா என்பதும் கேள்விக்குறியே. இந்தநிலையில்தான், 'விட்டதைப் பிடிக்கும்' நோக்குடன் பாடசாலைகள் இயங்கும் நேரத்தை ஒரு மணித்தியாலத்தால் அதிகரிக்கும் அறிவிப்பை இலங்கை அரசாங்கம் வெளியிட்டது. மேலோட்டமாகப் பார்த்தால் இதுவொரு நல்லதிட்டம் போல தோன்றினாலும், பல பாதகமான எதிர்விளைவுகளை இந்த நேர அதிகரிப்புக் கொண்டிருந்தது. குறிப்பாக இப்போதைய பொருளாதார நெருக்கடி நிலையால், மாணவர்களுக்கான இலவச மதிய உணவுவிடயம்சிக்கலாகியுள்ளது. இந்த நிலையில்,பாடசாலைகளின் செயற்படுகை நேரத்தை அதிகரித்தால், மாணவர்கள் தம் வீட்டுக்குச் செல்ல பிற்பகல் 3 மணியைத் தாண்டிவிடும். அதுவரை அவர்கள் பசியோடு படிக்கமுடியாது. பசி வந்தால் பத்தும் பறந்து போகையில், படிப்பு மட்டும் மூளையில் ஏறிவிடுமா? எனவே மாணவர்களின் உடல், உள நலன்களில் இந்த நேர அதிகரிப்பு நேரடிப்பாதிப்பை ஏற்படுத்தும். அத்தோடு பாடசாலைகளின் நேர அதிகரிப்புக்கு ஏற்ப, போக்குவரத்துச் சேவைகளும் மாற்றப்பட்ட புதிய அட்டவணையொன்றின்படியே இயங்க வேண்டி இருக்கும். இந்த நேர அட்டவணை மாற்றம், மக்களிடத்தேயும் பெரும் குழப்பங்களையும், அசௌகரியங்களையும் உண்டாக்கும். மாணவர்களின் விளையாட்டு, பொழுதுபோக்கு என்பவற்றுக்கான நேரம் குறுக்கப்படுவதால், அவர்களின் திறமைகள் மழுங்கடிக்கப்படுவதோடு, தேவையற்ற மன அழுத்தங்களும் மாணவர்களிடத்தே உருக்கொள்ளும் சந்தர்ப்பம் உண்டு.

எனவே இந்த நேர அதிகரிப்புக்கு பல தரப்புக்களும், குறிப்பாக ஆசிரியர் சங்கங்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டன. இதனால், இன்று ஆரம்பமாகும் 2022 ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணையில் நேர அதிகரிப்பை நடைமுறைப்படுத்துவதை அரசாங்கம் தற்காலிகமாக ஒத்திவைத்திருக்கின்றது. ராஜபக்சக்கள் அறிவிக்கும் திட்டங்களுக்கு ஆயுள் குறைவென்பது மீண்டுமொருமுறை நிரூபணமாகியிருக்கிறது. எந்தவொரு திட்டத்தையும் சீர்தூக்கிப் பாராமல், எழுந்தமானமாக நடைமுறைப்படுத்த முனைந்தால் இப்படியான பின்வாங்கல்களைச் சந்தித்தேயாகவேண்டும். ஆனால், 'நல்லமாட்டுக்கு ஒரு சூடு', 'சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது' என்று ஐந்தறிவு ஜீவன்களே ஒருமுறை தவறு செய்தால், அதிலிருந்து பாடம் கற்கும் போது, எழுமூளை கொண்ட இந்த ராஜபக்ச குடும்பம் மட்டும் தொடர்ந்தும் ஒரே தவறை திரும்பத் [illegible] கொண்டே இருக்கிறது. இதற்கு ஒரு முற்று[illegible] லையா...?

நாளொரு நல்வார்த்தை

"ஒரு புத்தகத்தின் அத்தியாயம் எழுதக் காத்திருப்பதைப்போல், புது வருடம் நம் முன்னால் நின்றுகொண்டிருக்கிறது. இலக்குகளை நிர்ணயிப்பதன் மூலமாக, அந்தக் கதையை எழுத நாம் உதவுவோம்." - மெலடி பீட்டி



## இலங்கைக்குழு பலவீனமானது!

கொழும்பு, ஏப்.18

சர்வதேச நாணய நிதியத்திடம் பேச்சை நடத்துவதற்காக இலங்கையிலிருந்து அலி சப்ரி தலைமையிலான குழு ஒன்று அமெரிக்கா சென்றுள்ள நிலையில், அந்தக் குழு பலவீனமானது என்று இலங்கையின் பொருளியலாளரும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை விரிவுரையாளருமான கே. டீ. கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியானது உடனடியாகக் கிடைக்காது. அதற்கு காலம் எடுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# நாணய நிதியத்தின் உதவி உடனடியாகக் கிடைக்காது

### அரசாங்கத்தின் ஆலோசகர் தகவல்

**கொழும்பு, ஏப்.18**

**சர்வதேச நாணய நிதியத்தின் முதல் தவணைக் கொடுப்பனவு இலங்கைக்கு கிடைப்பதற்கு ஆறு முதல் ஒன்பது மாதங்கள் ஆகலாம் என்று அரசின் ஆலோசகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.**

சர்வதேச நாணய நிதியத்துக்கும் நிதியமைச்சர் அலி சப்ரி தலைமையிலான இலங்கைக் குழுவுக்கும் இடையிலான பொருளாதார மீட்புப் பொதி தொடர்பான பேச்சு இன்று வொஷிங்டனில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தநிலையில் பொருளாதாரத்துறையில் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கும் நிபுணர்களில் ஒருவரான சாந்த தேவராஜன், இந்தத் தகவலை ஞாயிறு ஆங்கில இதழ் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜோர்ஜடவுன் பல்கலைக்கழகத்தின் சர்வதேச அபிவிருத்தித்துறைக்கான பேராசிரியராக பதவி வகிக்கும் அவர், சர்வதேச நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை தடையாக இருக்காது என்று குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி அல்லது ஏனைய சர்வதேச அமைப்புக்களிடமிருந்து நிதி பெறுவதற்கு இலங்கையின் அரசியல் உறுதியற்ற தன்மை ஒரு தடையாக இருக்காது. வரி அதிகரிப்புகள், செலவுக் குறைப்புக்கள் மற்றும் ஏழைகளுக்கான நிதிப் பரிமாற்றங்கள் போன்றவற்றை அரசும் மேற்கொண்டுள்ளதா என்பவற்றையே இந்த அமைப்புக்கள் பார்க்கின்றன.


இந்த விடயங்களில் திருப்தி ஏற்பட்டால், அமைப்புக்கள் ஒரு நாட்டுக்கு பணத்தை வழங்கலாம். அது சிறுபான்மை அரசாக இருந்தாலும்சரி அல்லது சிறிய பெரும்பான்மை அரசாக இருந்தாலும்சரி, இந்த விடயத்தில் பிரச்சினை எழாது. மத்திய வங்கியால் அறிவிக்கப்பட்ட கடன் சேவைக் கொடுப்பனவுகளை தற்காலிகமாக இடைநிறுத்துவது மற்றும் கடன் மறுசீரமைப்பு போன்ற அறிவிப்புக்கள், இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்றவற்றிலிருந்து நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கும். நாட்டின் வரிகளில் சில அதிகரிப்புக்களை மக்கள் எதிர்பார்க்கலாம். எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணங்களில் அதிகரிப்பு நிகழலாம் என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

19.04.2022
சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம்: 03.02 - 04.32
சித்திரை 06
சங்கடஹர சதுர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடி தொடர்பில் ஒன்றிணைந்து செயற்படத் தீர்மானம்

## சிறீகாந்தா தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஏப்.18**
**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பாக அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து பொதுவான குழு ஒன்றை அமைத்து அதனூடாகச் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம் என்று தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா தெரிவித்தார்.**

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழ்க் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், அரசியல் ஆய்வாளர்கள் பங்கேற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் உள்ள பொருளாதாரப் பிரச்சினை தொடர்பில் ஒவ்வொரு கட்சிகளும் தனித்தனியாகக் கருத்துக்கள் தெரிவிப்பதைவிட கூட்டாகத் தீர்மானங்கள் எடுப்பதே சிறந்தது. இந்த விடயத்தில் இணக்கமான முடிவொன்று எட்டப்பட்டது. கலந்துரையாடலில் பங்கேற்ற அரசியல் கட்சிகள் சிவில் அமைப்புக்களில் இருந்து ஒவ்வொரு பிரதிநிதிகளைத் தெரிவுசெய்து செயற்பாட்டுக்குழு ஒன்று அமைத்து, அதன் மூலம் எதிர்வரும் செவ்வாய் அல்லது புதன்கிழமைகளில் ஒன்றுகூடி மீண்டும் இது தொடர்பாக கலந்துரையாடுவோம்- என்றார். (எ-26)

# பொலிஸார் மீது தாக்குதல் முல்லையில் இருவர் கைது

**முல்லைத்தீவு, ஏப்.18**
பொலிஸார் மீது தாக்குதல் நடத்த முயன்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் மோட்டார் சைக்கிளில் அதிவேகமாகப் பயணித்து சாகசம் காட்டியவர்கள் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவருடன் மோதி விபத்தை ஏற்படுத்தியதுடன், தாக்குதலும் நடத்தியுள்ளனர். அந்தப் பகுதியில் கடமையில் இருந்த பொலிஸார் விசாரணை செய்ய முற்பட்டபோது பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவரைக் கைது செய்துள்ளனர். சந்தேக நபர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-19)



# புதிய அலுவலகம் திறந்த மணிவண்ணன் தரப்பு!

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணனால் யாழ்ப்பாணத்தில் செயற்பாட்டு அலுவலகமொன்று சம்பிரதாயபூர்வமாக நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அலுவலகத் திறப்பு நிகழ்வைத் தொடர்ந்து ஆதரவாளர்கள், செயற்பாட்டாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்றும் நடத்தப்பட்டது.

கலந்துரையாடலில் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சி.இளங்கோ, நல்லூர் பிரதேசசபை தவிசாளர் மயூரன், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்து ஆரம்பத்தில் செயற்பட்ட போதும், கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அவர்களுக்கிடையே பிளவு ஏற்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரும், பொதுச் செயலராக செ.கஜேந்திரனும் செயற்படும் நிலையில், கட்சியில் இருந்து வி.மணிவண்ணன் நீக்கப்பட்டுள்ளார் என்று அவர்கள் அறிவித்திருந்தனர். அதற்கு எதிராக வி.மணிவண்ணன் நீதிமன்றை நாடியிருந்தார்.

தற்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள் இரு அணிகள் செயற்பட்டு வருகின்றன. (எ-20)

# தமிழ்க் காங்கிரஸ் கட்சி சந்தர்ப்பவாத செயற்பாடு

## குற்றஞ்சாட்டுகிறார் சுரேஷ்

யாழ்ப்பாணம், ஏப்.18
ஆட்சி மாற்றத்தால் தமிழ் மக்களுக்கு எதுவும் ஆகப் போவதில்லை என்று கூறிய அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி இன்று ஆட்சி மாற்றம் தான் வேண்டுமென்று கூறுகின்றது. இது சந்தர்ப்பவாத நடவடிக்கை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவருமான சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸை பொறுத்தவரையில் சிங்களத் தரப்பில் நடக்கின்ற விடயங்கள் தமிழர் தேசத்துக்கு சம்பந்தம் இல்லை என்று கடந்த காலங்களில் கூறினர். ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையத்தில் எமது பிரச்சினைகள் பேசப்படும்போது ஆட்சி மாற்றத்துக்கான நடவடிக்கையைத்தான் இவர்கள் செய்கின்றார்களே தவிர அதன் ஊடாக தமிழ்மக்களுடைய பிரச்சினைகளில் மாற்றம் ஏற்படாது என்றனர். ஆனால், தற்போது நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளித்து கையெழுத்திடுவது, அவர்கள் ஆட்சி மாற்றத்தைத் தான் வேண்டி நிற்கின்றார்களோ? என்று கேள்வியை எழுப்புகிறது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றிபெற்றாலும்கூட அடுத்த கட்டம் என்ன என்பது தொடர்பாக சஜித் பிரேமதாஸவுடன் பேசினார்களா? நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு அடுத்ததாக என்ன செய்யப் போகின்றார்கள்? போன்ற கேள்விகளுக்கு இதுவரை எந்தவிதமான பதிலும் இல்லை. அதைத் தெளிவுபடுத்த வேண்டியது காங்கிரஸின் கடமை- என்றார். (எ-20)

# வடக்கு எஸ்.டி.ஐ.ஜிக்கு திடீரென இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஏப்.18
வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெகத் பளிக்கக்கார உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றப்பட்டுள்ளார். அவரது வெற்றிடத்துக்கு மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெயந்த வீரசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெகத் பளிக்கக்கார சமூக பொலிஸ் பிரிவுக்கு நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-26)



மிருசுவில் பாரதி முன்பள்ளியின் சித்திரைப் புத்தாண்டு பொங்கல் விழா அண்மையில் இடம்பெற்றது. இதன்போது புலம்பெயர் நாட்டில் வசிக்கும் சமூக சேவையாளர் கருணாகரன் விதுஷனின் நிதி அனுசரணையில் முன்பள்ளி மாணவர்கள் 48 பேருக்கு 65 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ம-14-159)

# முன்னணி யாருக்கு?

## தொடர்கிறது இழுபறி

யாழ்ப்பாணம், ஏப்.18
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பதிவுசெய்யப்படாத கட்சியாக இருந்தாலும் எம்மைத் தவிர யாரும் அதை உரிமை கொண்டாட முடியாது என யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் இளங்கலைஞர் மண்டபத்தில் நடந்த தமிழ்க் கட்சிகளின் கலந்துரையாடலில் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பலப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை உரிமைகோருவது தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினை தொடர்பில் ஏற்கனவே நீங்கள் அறிந்திருப்பீர்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எமது கட்சியாகும். ஏனெனில் பத்து வருடங்களாக நாமே அதனை செயற்படுத்தி வந்தோம். தற்போதும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பெரும்பாலான பிரதேசசபை உறுப்பினர்கள் எம்முடன் செயற்படுகிறார்கள். வவுனியாவில் தமிழ்த் தேசிய மக்கள்முன்னணியின் மாவட்டக் கூட்டத்தை நடத்தி இருந்தோம். அதில் 8 மாவட்டங்களைச் சேர்ந்த கட்சியின் ஆதரவாளர்களை ஒன்றிணைத்து கலந்துரையாடலை நடத்தி இருந்தோம். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எமது கட்சி. அதை யாரும் உரிமை கோர முடியாது- என்றார். (எ-20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் புத்தாண்டு பலன்கள் 2022




மங்கலகரமான **'சுபகிருது'** புத்தாண்டு கடந்த 14.04.2022 வியாழக்கிழமை அன்று பிறந்தது. குரு வாரத்தில், குரு பகவான் தன் சொந்த வீடான மீன ராசியில் இருக்கும் நேரத்தில் பிறக்கும் இந்தப் புத்தாண்டு பல்வேறு நன்மைகள் தரப்போகிறது. சுபகிருது என்றாலே நற்செய்கை என்று பொருள். சுபகிருது வருடத்தில் நாடெங்கும் நல்ல மழை பெய்யும் சுபிட்சமாக விளங்கும் என தமிழ் பஞ்சாங்கம் கணித்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டு காலமாக நோய்களின் பிடியில் சிக்கித்தவித்த மக்கள் இந்த ஆண்டு நிம்மதிப் பெருமூச்சு விடலாம்.




குரு ராசிக்கு 6ம் இடமான நோய், எதிரி ஸ்தானத்தில் (மீன ராசியில்) சஞ்சரிக்கிறார்.
சனி பகவான் ராசிக்கு 4ம் வீடான சுக, தாயார் ஸ்தானத்தில் அர்த்தாஷ்டமச் சனியாக உள்ளார். 2023 ஜனவரியில் அவர் 5ம் வீடான கும்ப ராசிக்கு பெயர்ச்சி ஆவார். இடையில் 2022 ஏப்ரல் 29 முதல் ஜூலை 12ம் திகதி வரை சனி அதிசாரமாக கும்ப ராசிக்கு சென்று திரும்பு வார். இந்த காலத்தில் அர்தாஷ்டம் சனியிலிருந்து விடுபடுவீர்கள்.
ராகு உங்கள் ராசிக்கு 7ம் வீடான மனைவி, தொழில் கூட்டாளி, பங்குதாரர் போன்றவற்றை குறிக்கக்கூடிய இடத்தில் உள்ளார். கேது உங்கள் ஜென்ம ராசியிலேயே இந்த வருடம் முழுவதும் சஞ்சரிப்பார்.
குருபகவான் துலாம் ராசிக்கு 6ம் வீடான ரண, ருண, ரோக ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். பொதுவாக குரு 6ம் இடத்தில் இருக்கும் காலத்தில் சாதகமற்ற பலன் தருவதாக இருக்கும். திடீர் உடல் நிலை பாதிப்பு, வீடு, பணியிடத்தில் வீண் பிரச்சினை, பகை ஏற்படலாம்.
குருபகவானின் 9ம் பார்வையாக துலாம் ராசிக்கு 2ம் வீடான குடும்பம், தன ஸ்தானத்தைப் பார்க்கிறார். இதனால் உங்களின் குடும்பத்தில் பிரச்னைகள் பெரியளவிற்கு செல்ல வாய்ப்பில்லை. தன வரவு பற்றாக்குறை இல்லாத அளவிற்குக் கிடைக்கும்.
இருப்பினும் செலவில் கவனம் செலுத்தாவிடில், நிதி சிக்கல் ஏற்பட வாய்ப்புள்ளது. மாணவர்களின் கல்வி மேன்மை தரும். துலாம் ராசிக்கு குரு பகவான் தன் 5ம் பார்வையாக கர்ம, தொழில் ஸ்தானத்தைப் பார்க்கிறார். இதுவரை சனியின் பார்வை இந்த இடத்தில் இருந்ததோடு, உங்கள் ராசி மீதும் விழுந்து வந்ததால் வேலை, தொழில் சார்ந்த பல்வேறு பிரச்சினைகள் சந்தித்து வந்தீர்கள்.
இந்த நிலையில் குருவின் சுப பார்வை இங்கு விழுவதால் உங்களின் துயரங்கள் நீங்கி தொழில் ஸ்தானம் பலமாகும். அதாவது உத்தியோகத்தில் மேன்மை, உங்கள் திறமை வெளிப்படும். பதவி, சம்பள உயர்வு உண்டாகும். புதிய வேலை கிடைக்க நல்வாய்ப்புகள் அமையும். துலாம் ராசிக்கு 1ம் இடமான ஜென்ம ராசியில் கேது சஞ்சரிக்கிறார் இதனால் உங்களுக்கு வாழ்க்கையில் ஒரு வெறுப்பு, விரக்தி ஏற்பட வாய்ப்புள்ளது. விரய செலவுகள் அதிகரிக்கும்.
அதனால் உங்களின் வாழ்க்கைத் துணையின் முன்னேற்றம், வேகமான செயற்பாடு கூட உங்களுக்குப் பிடிக்காத நிலை இருக்கும்.
சிவாலய வழிபாடு, சித்தர்கள் வழிபாடு செய்வது நல்லது.

## நிதி பற்றாக்குறை ஏற்படலாம்



## குருப்பெயர்ச்சி பலன்கள்





**சுப கிரகமான அதிசார குரு பெயர்ச்சி கடந்த 14ம் திகதி கும்பத்திலிருந்து மீன ராசிக்கு நிகழ்ந்தது. இந்தப் பெயர்ச்சியால் ஏற்படும் பலன்கள் 12 ராசிகளுக்குப் பார்ப்போம்.**

மற்றவர்களின் மனதைப் படித்தறியும் திறமைசாலிகள் நீங்கள். இதுவரையிலும் உங்கள் ராசிக்கு 5ல் அமர்ந்து பலன் தந்த குருபகவான். இனி 14.4.2022 முதல் 22.4. 2023 வரை 6ம் வீட்டில் அமர்கிறார். இந்த காலக் கட்டத்தில் புதிய அனுபவங்களால் சில பாடங்களையும், முன்னேற்றத்துக்கான வழியையும் வழங்குவார்.
ஆகவே, 'சகட குருவாச்சே!' என்று அச்சப்படாதீர்கள். உங்களின் பிரபல யோகாதிபதிகளான சனி மற்றும் புதனின் நட்சத்திரத்தில் குரு செல்வதால், அவ்வப்போது உங்களுக்கு யோக பலன்களையும் அள்ளித் தருவார் குரு.
அதேநேரம் வீண் செலவுகளும் உங்களைப் பற்றிய வீண் அவதூறுகளும் அதிகரிக்கும். காரியங்களில் அலைச்சல் உண்டு. சாதாரணப் பிரச்சினைகளும் சண்டையில் முடியலாம்; கவனம் தேவை.
வீட்டில் வீண் ஈகோ பிரச்னைகளுக்கு நீங்கள் காரணமாக வேண்டாம். எதிலும் சற்று விட்டுக்கொடுத்துப் போகவும். அதேபோல் எந்தவொரு காரியத்திலும் எவருக்கும் எவ்விதமான வாக்குறுதியும் தராதீர்கள். பணவரவு உண்டு என்றாலும் செலவுகளும் துரத்தும். சுபச் செலவுகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளுங்கள்.
சிற்சில தருணங்களில் ஏமாற்றம், தாழ்வு மனப்பான்மை வந்துசேரும். மனதைத் தளரவிடாதீர்கள்.

**14.4.2022 முதல் 29.4.2022 வரை**
குரு பூரட்டாதி 4ம் பாதத்தில் செல்கிறார். சுபச் செலவுகள், திடீர்ப் பயணங்கள் அதிகரிக்கும். சிலநேரங்களில் இனம் தெரியாத கவலைகள், வேலைச்சுமை, பொருள் இழப்பு வந்து செல்லும். எவருக்காகவும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம்.

**30.4.2022 முதல் 24.2.2023 வரை**
உத்திரட்டாதி நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால், மனஅமைதி கிட்டும். பிரிந்தவர்கள் ஒன்று சேர்வீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். பணவரவு அதிகரிக்கும். ஆட்சியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள்.



புதிதாக வீடு வாகனம் வாங்குவீர்கள். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். 8.8.2022 முதல் 16.11.2022 வரை உத்திரட்டாதி நட்சத்திரத்திலேயே குருபகவான் வக்ரத்தில் செல்வதால், புதிய யோசனைகள் பிறக்கும். பிள்ளைகளிடம் கொஞ்சம் கண்டிப்பு தேவை.

**24.2.2023 முதல் 22.4.2023 வரை**
குருபகவான் புதனின் ரேவதி நட்சத்திரத்தில் செல்வதால் எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்கள், நணபர்களுடன் இருந்து வந்த மனக்கசப்பு நீங்கும். கௌரவப் பதவிகள் தேடி வரும். சொத்துத் தகராறு தீரும். அடகிலிருந்த பழைய நகையை மீட்பீர்கள். வாகனம் வாங்குவீர்கள்.

**மொத்தத்தில் இந்தக் குருப் பெயர்ச்சி, வளைந்துகொடுத்து செயற்படவைத்து பெரும் வெற்றிகளைப் பெற்றுத் தரும்.**

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த சுபச்செய்தியால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும் நாள். தேவையான பொருள்கள் வாங்குவீர்கள். ஆன்மிகத்தில் ஆர்வம் ஏற்படும். முயற்சி நல்லபடியாக முடியும்.

**இடபம்:** எதிர்கால முன்னேற்றம் பற்றிய சிந்தனை துளிர்விடும். பிற்கால நன்மைக்கு வழிவகுக்கும் செயல்களில் ஈடுபடுவீர்கள். புதிய தொழில் முயற்சிகள் லாபம் தருவதாக அமையும்.

**மிதுனம்:** பழைய பிரச்சினைகள் நீங்கி மனதில் நிம்மதி கிடைக்கும். இடமாற்ற முயற்சிகளில் அனுகூலம் ஏற்படும். பெரியோரின் ஆலோசனை கிடைத்துப் பயன்பெறுவீர்கள்.

**கடகம்:** குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் மூலம் நன்மை வரும். இதுவரை அலுவலக வேலையில் இருந்த சுணக்கம் நீங்கும். குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும்.

**சிம்மம்:** உறவினர் ஒருவருக்கு நன்மை செய்து பாராட்டுப் பெறுவீர்கள். பணிச்சுமை சற்று அதிகமானாலும் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. நண்பர்களுக்கு உதவுவதால் ஒற்றுமை மேம்படும்.

**கன்னி:** வாகன வகையில் ஆதாயம் உண்டாகும். கலகலப்பானநாள். மேலதிகாரிகளிடம் நல்ல பெயரைப் பெற்றுக்கொள்வீர்கள். வீட்டில் எதிர்கால நன்மை கருதி முடிவு எடுப்பீர்.

**துலாம்:** புதிய பொழுதுபோக்கு அம்சங்களில் ஆர்வம் வரும். மாணவர்களுக்குக் கல்வியில் கூடுதல் கவனம் தேவைப்படும். வாழ்க்கைத்துணையின் முயற்சியால் குடும்ப நிலை உயரும்.

**விருச்சிகம்:** வீட்டில் சுபச்செலவுகள் ஏற்படும். வாகன சேர்க்கை உண்டு. தங்கம், வெள்ளி பொருள்கள் வாங்குவீர்கள். மனம் மகிழும். வியாபாரிகளுக்குப் புதிய மேம்பாடு திருப்தி தரும்.

**தனுசு:** சகபணியாளர்களிடம் விட்டுக் கொடுத்து செல்ல வேண்டியநாள். பிள்ளைகளுக்காக அதிக செலவுகள் செய்ய வேண்டியிருக்கும். பெற்றோரின் ஆரோக்கியம் மேம்படும்.

**மகரம்:** பணிமாற்றம் பற்றி ஆலோசனை எடுத்துக்கொள்ளுங்கள். முயற்சி முன்னேற்றம் தரும். நிதானமான நாள். பழக்கமற்ற புதிய தொழிலில் ஈடுபட வேண்டாம்.

**கும்பம்:** உங்களை மேலதிகாரி பாராட்டுவார். நிதி நிலை சீராகும். உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வருகை மகிழ்ச்சி தரும். உடன்பிறந்தோரால் ஆதாயம் ஏற்படும்.

**மீனம்:** பொருள்கள் வாங்கலில் கவனமாக இருப்பீர்கள். மற்றவர்களுடன் பழகும்போது கவனம்தேவை. சொத்துக்கள் மூலம் வருமானம் வரும். நின்று போன பணி தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரிஅம்மன் கோவில் - பரிபாலன சபை

## Chavakachcheri Varivanam Sri Muththumari Amman Temple - BOARD OF TRUSTEE

Email:- muththumariamman2022@gmail.com

சிவன் கோயில் வீதி, சாவகச்சேரி.

## பொதுச்சபைத் தெரிவுக் கூட்டம் - 2022

**திகதி :-** 02.05.2022 (திங்கட்கிழமை)

**நேரம் :-** 3.00 மணி

**இடம் :-** வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்

மேற்படி பொதுச் சபைத்தெரிவுக் கூட்டமானது குறித்த தினத்தில் இடம் பெறவுள்ளது. திருப்பணி வேலைகள் செய்து கும்பாபிஷேகம் செய்ய வேண்டியுள்ளதால் முத்துமாரி அம்மன் உபயகாரர்கள் எல்லோரும் குறித்த தினத்தில் தவறாது வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர்
பரிபாலன சபை,
வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்.

## மரண அறிவித்தல்



### கிருஸ்ணதாசன் மகேஸ்வரி (அழகு)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் புத்தூர் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணதாசன் மகேஸ்வரி (அழகு) கடந்த (15.04.2022) அன்று இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சதாசிவம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கிருஸ்ணதாசனின் அன்பு மனைவியும், அமரர் கனகசுந்தரம், கமலாம்பிகை, குணவதி, மதிவதனா மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெகதீசன், இராஜகோபாலன், இரங்கநாதன், கிருபாகரமூர்த்தி, அமரர் காசிநாதர், புவனேஸ்வரி, சிவராசா, மோகனதாஸ் மற்றும் அமரர் சுபேந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு புத்தூர் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக அந்திரானை இந்து [illegible]

077 977 3023

## மாற்றுத்திறனாளிகளுக்கு வங்கியில் இலகு வசதிகள்

**மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை**

முல்லைத்தீவு, ஏப்.18

முல்லைத்தீவு நகரில் இயங்கும் இலங்கை வங்கிக் கிளையில் மாற்றுத்திறனாளிகளும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் அரச, அரசார்பற்ற மற்றும் பொதுநிறுவனங்களில் சிரமம் இன்றி சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இது சட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு சுற்றறிக்கை மற்றும் உயர்நீதிமன்றின் தீர்ப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருந்தும் சில பொதுக்கட்டடங்களில் அத்தகைய வசதிகள் இல்லை. இதுதொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜ் தெரிவித்துள்ளார். (க-214)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திருமதி லலிதாமலர் முகுந்தன்

BBA (Hons), PGDE, M.Phil(Edu), DSM, SLPS-1,

**பிரதீபா பிரபா விருது (2017,2018)**



எமது கல்லூரியில் 2013.01.18 முதல் அதிபராகப் பதவியேற்று, தனக்கெனத் தனியிடம் பதித்த தன்னிகரற்ற தலைமைத்துவம் வாய்ந்த அதிபர் அவர்கள், இன்று 18.04.2022 யா/மீசாலை **வீரசிங்கம் மத்திய கல்லூரியில்** (தேசிய பாடசாலை) அதிபராகக் கடமையேற்பதனை மனமார வாழ்த்துவதோடு, மேலும் அவரது பணி சிறக்க இறையருளை வேண்டுகின்றோம்.

Congratulations

**சேவையாளர் சங்கம்,**
**யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.**

(CR 8285) (4/6)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 28.04.2021 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் திரு.**

### சின்னத்துரை தேவமனோகரன்

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிப் பிரார்த்தனை இன்று (18.04.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**531, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CR 8084) (4/6)

**குடும்பத்தினர்.**
**076 191 0952**

## 32ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 . 07 . 1908



மறைவு 11 . 05 . 1990

### திருமதி பூரணம் இளையதம்பி

**ஏழாலை தேவி கோயில் ஸ்தாபகர்**
**(தேவி ஆச்சி)**
**திதி : துதியை (18.04.2022)**

பூரணம் ஆச்சி தம் குலதெய்வமான தேவிக்குக் கோயிலமைக்க எந்த எந்தத் தேவைகளும் எந்த எந்த முகாந்திரங்களும் ஏற்படக்கூடுமோ அந்த அந்தத் தேவையெல்லாம் தன் சுயதேவையாகவும் அந்த அந்த முகாந்திரமெல்லாம் தன் சொந்த முகாந்திரமாகவும் ஏற்று நின்று தெய்வ பக்தி அடிப்படையில் எழுந்த அபாரத் துணிவே துணையாகக் கொண்டு பல வருடங்களாகக் கோயிலின்றியிருந்த தேவிக்குக் கோயில் கட்டி முதலில் பக்தி வழிபாட்டு நிலையமாய்ப் பலரும் பயன்கொள்ள வைத்தாள். பின் சில வருடங்களில் ஆகம முறை வழிபாட்டுக்கான சிற்பக் கோயிலாக அதை மாற்றி ஆகம ரீதியாகத் துர்க்கா தேவியைப் பிரதிஷ்டை செய்து நித்திய நைமித்திய [illegible] பூரணம் அவர்களின் நினைவு மலரில் (10.06.1990) சில பணிகள்.

பண்டிதர்-மு.கலாநிதி கந்த[illegible]

[illegible] நினைவுடன் பாதம் பணிந்து நிற்கும்

மகன்

ஏழாலை மேற்கு, ஏழாலை.

பூலோகசிங்கம் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எரிபொருள்...
ளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வந்த நிலையில் நேற்று மாலையிலிருந்து அந்த நிலைமை சுமுகமாகியுள்ளது. போதியளவு பெற்றோல் மற்றும் டீசல் கிடைக்கப்பெற்ற நிலையில் நேற்று மாலையிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்தி லுள்ள பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களில், தாராளமாக அவை விநி யோகிக்கப்பட்டன. இன்றும் பெற்றோல், டீசல் என்பன யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக் கும், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அனுப்பி வைக்கவுள்ளது. இதனால் நிலைமை மேலும் சுமுகமடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ஒ-17)

**Chemistry & Biology**
பிரபல பாடசாலையின் ஆசிரியரினால் தனி மற்றும் குழு வகுப்புக்கள் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலத்தில் கற்பிக்கப்படும்.
(CR 8086) (4/6) **077 910 1195**

**வீடு வாடகைக்கு**
யாழ். திருநெல்வேலி விவசாய பண்ணை அருகில் பலாலி வீதி முகப்புடன் விசாலமான வீடு வாடகைக்கு உண்டு. அரச. அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு ஏற்ற வீடு.
(CS 19379) (4/6)
**077 978 9571**

## பெயர் மாற்றம்
மந்துவில் வடக்கு கொடிகாமத்தில் வசிக்கும் **மகாதேவா சிறிகாந்தன்** ஆகிய நான் எனது பெயரை **மகாதேவா தர்மசிவகாந்தன்** என மாற்றும் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **மகாதேவா தர்மசிவகாந்தன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.
(ccha 686) (2.6) **மகாதேவா தர்மசிவகாந்தன்**

## கண்ணீர் அஞ்சலி

சங்க உறுப்பினர்
**திரு. பிள்ளையான் பரமேஸ்வரன்**
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி வள்ளியம்மை பிள்ளையான்**
(கீரி ரோட், வலைப்பாடு, மன்னார்)
அவர்கள் 15.04.2022 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
(cr 378631) (2.6)
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை ஊழியர் நலன்புரிச் சங்கம், பளை.**

## மரண அறிவித்தல்
தோற்றம்
11 • 08 • 1967



மறைவு
06 • 04 • 2022

**திருமதி விமலன் சுகிர்தராணி**
சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி ரெஜின் கில்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலன் சுகிர்தராணி அவர்கள் 06- 04-2022 அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் நாகம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், சுப்பிரமணியம் யோகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற விமலனின் அன்பு மனைவியும், சுதாராணி, ஜெயராணி, குலேந்திரன் காலஞ்சென்ற சிவேந்திரன் ஆகியோரின் சகோதரியும், கஜேந்திரன், விமலநாதன், கண்ணம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (17.04.2022) ஜேர்மனியில் அடக்கம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

ஞானவைரவர் கோவிலடி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
(CS 19382) (4/6)
தகவல்
குடும்பத்தினர்.

### ஊரடங்கு...
வதந்தி பரவியது. இருப்பினும் அவ்வா றான எந்தவொரு அறிவித்தலும் அரச தரப்பு விடுக்கவில்லை என்பதுடன், இவ் வாறான திட்டம் எதுவும் இல்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

### காலிமுகத்திடல்...
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி காலிமுகத்திடலில் தொடர் போராட்டம் இடம்பெற்று வருகின்றது. இந்நிலையில், போராட்டக் களத்தில் நேற்றுமுன்தினம் சிங்கள மொழியில் மட்டும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. இதற்குப் பல தரப்பி னரும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். இன, மத, மொழி பேதங்களுக்கு அப் பால் மக்கள் ஐக்கியப்படும் வேளையில் பிரிவு எதற்கு? எனவும் அந்தத் தரப்பினர் சுட்டிக்காட்டியிருந்தனர். இவ்வாறான தொரு பின்புலத்திலேயே நேற்று மாலை தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக் கப்பட்டது. அத்துடன் இலங்கையின் தேசியக் கொடியையும் ஏந்தியிருந்தனர். இதேவேளை, தமிழில் தேசிய கீதம் பாடி முடிவடைந்த பின்னர் அங்கு நின்ற பிக்கு ஒருவர், தமிழில் தேசிய கீதம் பாடியோரு டன் முரண்பட்டார். இருப்பினும் தமிழில் தேசிய கீதம் பாடுவதற்கு ஒழுங்கமைத்த வர்கள் நிலைமையைச் சமாளித்தனர். (அ-ஒ-22-44)

### கொழும்பு...
யில் தீப்பந்த போராட்டம் நேற்று முன் னெடுக்கப்பட்டது. யாழ். பண்ணை பாலத்தடியில் நேற்று மாலை 6.50 மணியளவில் ஆரம்பித்த இந்தத் தீப் பந்த போராட்டம் அங்கிருந்து சுமார் 150 மீற்றர் தூரத்திலுள்ள பண்ணை சுற்றுவட் டம் வரை பேரணியாகச் சென்றது.

இந்தப்போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் உள்ளூராட்சி மன்றங்களின் தலை வர்கள், உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களுடன் நாடா ளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்துகொண்டார்.

'எங்கே எங்கே உறவுகள் எங்கே?', 'சுய நிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்', 'பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு', 'கோத்தா அரசே வீட்டுக்குப் போ' 'இனப் படுகொலைக்கு நீதிவேண்டும்' போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன. (அ-ஒ-இ)

## பங்குப் பரிவர்த்தனை நிறுத்தம் நாட்டுக்கு மோசமான சமிக்ஞை

கொழும்பு, ஏப்.18
சர்வதேச திறந்த பொருளாதாரத்துக்கு தூணாக விளங்கும் கொழும்பு பங்குப்பரிவர்த்தனை நடவடிக்கைகள் ஒரு வாரகாலத்துக்கு அதா வது இன்று முதல் எதிர்வரும் 22 ஆம் திகதிவரை மூடப்பட்டுள்ளது. இது சர்வதேசத்துக்கு மோசமான சமிக்ஞையாக அமைந்துள்ளது என்று பொருளாதார வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளது போன்றதொரு தோற்றப்பாட்டைக் காட்டுவதாகவும் சர்வதேச பார்வையில் இது பெரி யதொரு தாக்கத்தைச் செலுத்தும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன்மூலம் வர்த்தகத்துக்குப் பெரும் நெருக்கடி நிலைமை தோன் றியிருப்பதாக சர்வதேசத்துக்குப் புலப்படுத்தப்படுகின்றது என்றும் பொருளாதார வல்லுநர்கள் தெரிவிக்கின்ற னர்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு பங்குப்பரி வர்த்தனை நிலையத்தின் செயற்பாடுகள் 18 ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதிவரை மூடப்படும் எனப் பிணைகள் மற்றும் பரிவர்த் தனை ஆணைக்குழு அறிவித்திருந்தது. இந்த முடிவு நாட்டின் அரசியல் ஸ்திரமற்ற தன்மை மற்றும் பொருளாதார நிச்சயமற்ற நிலைமை காரணமாக எடுக்கப்பட்டது என்று அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனினும் பங்குப்பரிவர்த்தனையில் ஈடுபடும் முகவர்கள் பலர் தமது அதிருப்திகளை வெளி யிட்டு இருக்கிறார்கள்.

இதுதொடர்பில் தங்களு டன் எந்தவித கலந்தா லோசனைகள் இன்றி தீர்மானம் எடுக்கப்பட் டுள்ளது என்றும் அவர் கள் தெரிவித்தனர். (எ-இ)

## வரையறுத்த அமைச்சரவையை நியமிப்பதற்கு கோத்தா திட்டம்!

கொழும்பு, ஏப்.18
அரசாங்கத்தின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல வரையறுக்கப்பட்ட அமைச்சரவை நியமிக்கப் படும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன் னாள் அமைச்சர்களிடம் கூறியுள்ளார். ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முன் னாள் அமைச்சர்கள் மற்றும் ஜனாதிபதிக்கு இடையி லான சந்திப்பின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரி வித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, தான் அரசமைப்புக்கு அமைய செயற்பட்டு வருவதா கவும் அதற்கு வெளியில் நடவடிக்கைகள் எதனையும் எடுக்க போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கத் தின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக சந்திப்பில் விரிவாக கலந்துரையாடப்பட் டுள்ளது.

தங்களுக்கு அமைச்சு பதவிகள் தேவையில்லை எனவும் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களை அமைச்சர்களாக நியமித்து அமைச்சரவையின் பணி களை முன்னெடுக்க வேண்டும் என்றும் முன்னாள் அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதியிடம் கூறியுள்ளனர். இதனடிப்படையில் 15 அமைச்சர்களை மாத்திரம் கொண்ட அமைச்சரவை நியமிக்கப்படலாம் என அர சியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சமல் ராஜபக்ச, பசில் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச மற்றும் சஷீந்திர ராஜபக்ச ஆகியோர் அமைச்சர்களாக நிய மிக்கப்பட மாட்டார்கள் என்றும் தெரியவருகிறது. அத்தோடு காமினி லொக்குகே, பந்துல குணவர்தன, மகிந்தானந்த அளுத்கமகே, ஜோன்ஸ்டன் பெர் னாண்டோ, ரோஹித்த அபேகுணவர்தன ஆகியோர் புதிய அமைச்சரவையில் அங்கம் வகிக்க மாட்டார்கள் என அரசியல் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன. (எ-இ)

## கடந்த காலத்தை மறவுங்கள் காலியில் ஒன்று சேருங்கள்
### தமிழர்களுக்கு அழைப்பு

எதிர்காலச் சந்ததியினருக்காக நாட்டைப் பாதுகாக்க காலிமுகத்திடலில் இடம் பெற்று வரும் அரசுக்கு எதிரான போராட் டத்தில், இலங்கைவாழ் அனைத்துத் தமிழர்களும் பங்குபற்றவேண்டும் என்று சிங்களக் கலைஞர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

"பேரன்புமிக்க தமிழ்ச் சகோதரர்களே! இது உங்களுடைய தேசம். நாம் பிறந்த இந்தத் தேசத்தை நமது எதிர்காலச் சந்த திக்காகப் பாதுகாப்போம். ஆகவே, கசப் புணர்வுகள் கடந்து, அவற்றை மறந்து காலிமுகத்திடலுக்கு வாருங்கள். நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பு சீராக அமை யும் என்று நம்பியிருந்தோம். ஆனா லும் அந்த நம்பிக்கை வீணாகிவிட்டது. ஆகவே தான் நாமும் இந்தப் போராட்டத் தில் இணைந்து இருக்கின்றோம்.

இன்றைய இந்த ஆட்சியானது நமக் குத் தேவையில்லை. நாட்டை சிறந்த முறையில் நிர்வகித்துக்கொண்டு நடத்து பவர்களே எமக்குத் தேவை. அதற்காக நாம் அனைவரும் இணைந்து போராடு வோம்" - என்றும் அவர்கள் தெரிவித்துள் ளனர். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 17.03.2022 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் திரு. இராசதுரை யோகராசா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (16.04.2022) சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அன்றைய தினம் நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடை பெற்றது. அதனைத் தொடர்ந்து இன்று (18.04.2022) திங்கட்கிழமை நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உரும்பிராய் மேற்கு,
அன்னுங்கை, கோண்டாவில். (CS 19376) (4/6)

குடும்பத்தினர்
077 109 9918

# மரண அறிவித்தல்



## பொன்னுத்துரை தனலெட்சுமி

வேலணை மேற்கு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், மன்னார் புதிய மூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை தனலெட்சுமி கடந்த (15.04.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாயகம் அன்னபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பசுபதி சிவயோகம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லம்மா, காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலஞ்சென்ற குமாரசாமி, காலஞ்சென்ற நாகராசா மற்றும் கந்தசாமி (துங்கராசா), காலஞ்சென்ற சண்முகலிங்கம் (சண்முகராசா) மற்றும் மாணிக்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற ஜயாத்துரை, காலஞ்சென்ற மனோன்மணி, காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் செல்வநாதன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜெயந்தி, ஜெயகுமார் (கனடா) காலஞ்சென்ற ஜெயலட்சுமி, காலஞ்சென்ற ஜெயமோகன் மற்றும் புஸ்பராசா (பிரான்ஸ்), ஜெயகௌரி, ஜெயசிறி ஆகியோரின் பாசமிகு தாயாரும், மருதலிங்கம், நந்தினி (கனடா), கமலேஸ்வரி (பிரான்ஸ்), நகுலராசா, கிருபாகரன் ஆகியோரின் அன்பு மாமியும், சங்கீதா (மதனா) காலஞ்சென்ற வினோதா மற்றும் தீபிகா, கோபின், நவீன் (கனடா), ஹரிஸ்ராஜ் (பிரான்ஸ்), பானுஷா, கதுஷன், ஜகர்சினி, ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காருயன், மதுஷன், அக்ஷாயினி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.04.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மன்னார் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

புதிய மூர் வீதி, உப்புக்குளம்,
மன்னார். (CR 8275) (4/6)

தகவல்:-குடும்பத்தினர்
076 459 8643, 077 255 8971

# மரண அறிவித்தல்



தோற்றம்
31.12.1932

மறைவு
16.04.2022

## பொன்னு இராசையா

**(கோல்டன் இராசையா- பிரபல தொழிலதிபர்)**

திருநெல்வேலி மாரியம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னு இராசையா அவர்கள் கடந்த (16.04.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னு சீதேவியின் அன்பு மகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், அரசரட்ணம் (அவுஸ்திரேலியா), அரசலிங்கம், மகேந்திரன் (டென்மார்க்), இராஜரட்ணம், ஜெயரத்தினம், கருணாதேவி - குணரட்ணம் (டென்மார்க்), சேந்திமாலா - சந்திரராசா, இராஜேஸ்வரி - நவரட்ணம், கலையரசி - ஸ்ரீகாந்த் ஆகியோரின் அன்புத் தந்தையும், சன்சிகா பிரபாகரன் (Doctor), ரஜீவன் (DO), கௌசிகா, பிரசன்னா, திலக்சன், துர்க்காந்தி, சங்கீதா, ஜீனுஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.04.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

(CS 19374) (4/6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



தோற்றம் 09 . 05 . 1941

மறைவு 20 . 03 . 2022

### அமரர் கனகசுந்தரம் முத்துச்சாமி

(தலைமை உத்தியோகத்தர், தலவாக்கலை, பலாங்கொடை, மஸ்கெலியா தேயிலைக் கூட்டுத்தாபனம், நிர்வாக உத்தியோகத்தர், மஸ்கன்ஸ் நிறுவனம்)

திதி வெண்பா

ஆண்டு பிலவமதில் அண்டிய பங்குனி
பூண்ட வபரத் திருதியை – நீண்டபுகழ்
முத்துச் சாமியையன் இவ்வுலகை நீத்துயர்
அத்தனடி சார்ந்ததிரு நாள் .

எமது குடும்பத்தலைவர் அமரத்துவமுற்ற வேளை எமக்குப் பலவழிகளிலும் உதவிகள் நல்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எமது துயரில் பங்குகொண்ட சமூகநலன் சார்ந்த உறவுகள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


அமரரின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வும் திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள "சிவகாமி மஹால்" மண்டபத்தில் (தேசிய சேமிப்பு வங்கிக்கருகில்) நாளை (19.04.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெறும்.

இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர் சார்பில்
வைத்திய கலாநிதி மு. மலரவன்

(cs.44063) (2.6)

## மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 06 . 1947

மறைவு 16 . 04 . 2022

### செல்லர் சிவகுருநாதன் ( நாதன் )

அச்சுவேலியை வசிப்பிடமாகவும் வவுனியா குருமன்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் சிவகுருநாதன் கடந்த (16.04.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - செல்லம் தம்பதியினரின் அன்பு மகனும் நீர்வேலி சின்னத்துரை சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் பாசமிகு கணவரும் சிவவரோதினி, சசிதரன், பிரசாந் (சுதன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவிச்சந்திரன், ஜெனித்தா, தட்சாயினி, ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவலிங்கம்.சிவநடராசா, காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், சிவமணி, சிவபாதசுந்தரம், சிவமலர், சிவலட்சுமி, சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விதுசன், வினுஜன், நிந்துசன், பாருசன், ஜெருசன், துவாரகன், யுகேந்திரன், பிரியங்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.04.2022) செவ்வாய்க்கிழமை பகல் 11 மணியள வில் வவுனியா குருமன்காட்டிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை களுக்காக தட்சனாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

தொடர்புகளுக்கு:
மகன் ( பிரான்ஸ் ) 0033 7882 17610
மகள் ( பிரான்ஸ்) 0033 7512 21659
மகன் ( லண்டன் ) 0044 7908 209 470 (cs 993)(2.6)

தகவல்:
பிள்ளைகள், சகோதரர்கள்

## ஓராண்டு நினைவு நாள் அழைப்பு



மலர்வு 04.05.1950

உதிர்வு 28.04.2021

கடந்த 28.04.2021 அன்று இறைவனடி சேர்ந்த
எங்கள் பாசமிகு குடும்பத்தலைவர்

### அமரர் லோட்டன் லயனல் இராஜகுமார் (குமார்)

(உரிமையாளர்: எரிபொருள் நிலையம், சண்டிலிப்பாய்)

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (18.04.2022) திங்கட்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் (சங்குவேலி வடக்கு, மானிப்பாய்) நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது உயிர் அமைதி வழிபாட்டிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவர் அமரர். ஜோசப் குணரட்ணம் லோட்டன் லயனல் இராஜகுமார் அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு ஓடிவந்தோருக்கும் உடனிருந்து உதவியோருக்கும் தொலைபேசி மூலமும் இணைய வழியூடாகவும் எமக்கு ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் லங்கா ஸ்ரீ மூலம் அஞ்சலி செலுத்தியோர்களுக்கும் தொடர்ந்து ஆறு நாட்களும் துக்கத்தில் கைகொடுத்தோருக்கும் அந்தியேட்டி வரை உணவு, நீராகாரம் வழங்கியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள், மலர் வளையங்கள், பதாகைகள் வெளியிட்டோருக்கும் அவர் சுகயீனமுற்றிருந்து எட்டு நாட்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் அவரை கண்ணும் கருத்துமாக பராமரித்த வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் அனைவருக்கும் அவரது உடலை பாதுகாப்பதற்கு பதப்படுத்த உதவிய White House நிறுவனத்தினருக்கும் அவரின் இறுதிச்சடங்கின் போது அவரது விருப்பப்படி பாடை கட்டி உதவிய சங்குவேலி இளைஞர்களுக்கும் அதனை அலங்கரிக்க தேவையான இயற்கை மலர்களை பெற்றுத்தந்த மெடோனா பூச்சேவையாளர்களுக்கும் இறுதிக்கிரியைகளின் போது வழிநடத்தி உதவியவர்களுக்கும் அஞ்சலி உரை வழங்கியோருக்கும் இவரது மரணச்சடங்கு பெருந்தொற்றுக் காலமாக இருந்தபோது சடங்குகளை சிறந்த முறையில் நடத்த உதவிய சகல சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் இறுதிநிகழ்வின் போது கீழைத்தேய, மேலைத்தேய வாத்தியங்களை இசைத்தவர்களுக்கும் இறுதிஊர்வலத்தில் அன்னாரை தாங்கிய பாடையினை கால்நடையாக காட்டுப்புல மயானம் வரை காவிச்சென்ற அனைவருக்கும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற அனைத்துக் கிரியைகளையும் நடாத்த வழிநடத்தி உதவியவர்களுக்கும் அதில் பங்கேற்றவர்களுக்கும் இவ் இறுதிக்கிரியை நிகழ்வை நேரலையாக ஒளிபரப்ப உதவிய வானவில் கலையகம் நிறுவனத்திற்கும் அத்துடன் இன்று (18.04.2022) நடைபெறும் அவரது ஓராண்டு நினைவுத் திதியின் போது கலந்து கொள்வோருக்கும் உதவி புரியவர்களுக்கும் இத்தருணத்தில் எமது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு:-

* எமது குடும்பத் தலைவரின் ஈமக்கிரியைகளின் போது பங்கு கொண்ட அனைவருக்கும் இவ் அழைப்பையும் நன்றிகளையும் சமர்ப்பிக்கின்றோம்...
* எங்கள் குடும்பத்தினரால் தனிப்பட்ட ரீதியாக அழைப்பிதழ் வழங்க தவறியவர்களும் இவ் அழைப்பை தயவு செய்து ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

[illegible] - 077 102 4448
தர்சினி - 077 3838 501

(2.6)

லோட்டன் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 17.01.1930 — ஆண்டவன் அடியில் 18.04.2021

**அமரர் திருமதி**
**விசுவநாதர் பொன்னம்மா**

எமது குடும்பத்தின் குல விளக்காய்
எம்மை அன்புடன் அரவணைத்து
ஆளாக்கிய அன்னையே! ஆண்டொன்று
போனாலும் உங்கள் நினைவு
எம்மைவிட்டு அகலவில்லை உங்கள்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
நுணசை முருகனை வேண்டுகின்றோம்.

மாதகல் வடக்கு,
மாதகல்

குடும்பத்தினர்

(cs.19309) (2.6)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.செல்லத்துரை அகிலன்**



**திரு.ஞானமூர்த்தி திரோணன்**



**திரு.இராசநாயகம் சந்திரசேனா**
Dip.in.Teach,Dip.in.Counseling,
BA,PGDE, M.Ed (UoJ)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பட்டமளிப்பு விழாவில் அகிலன், சந்திரசேனா ஆகிய இருவரும், இலங்கை திறந்த பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் திரோணனும் கல்வியியல் முதுமாணி (M.Ed) பட்டம் பெற்ற எமது பாடசாலையின் ஆசிரியர்களை மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம், யா/ இளவாலை கன்னியர் மடம் ம.வி.

(cr.37865)(2.6)

# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் சுந்தரம் நித்தியானந்தம்**

(ஓய்வுநிலைப் பொறியியலாளர் - காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

தாயின் மடியில் 06.09.1951 — இறைவன் அடியில் 18.03.2022

யாழ். ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கை வசிப்பிடமாக வும் கொண்டிருந்த திரு.சுந்தரம் நித்தியானந்தம் அவர்கள் கடந்த (18.03.2022) அன்று சிவபதமடைந்த செய்தியறிந்து அனைத்து வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நோயுற்றிருந்த காலத்தில் உதவி புரிந்த யாழ். போதனா வைத்தியசாலை இரத்த சுத்திகரிப்பு பிரிவைச்சேர்ந்த வைத்தியர்கள், தாதியர்கள், உதவியாளர்கள் மற்றும் அம்புலன்ஸ் சேவை வழங்கிய சென் ஜோன்ஸ் அன்புலன்ஸ் நிறுவனத்தினருக்கும், நன்றிகளைத் தெரிவித்துக்கொள் கிறோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நேற்று (17.04.2022) அன்று காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. நாளை (19.04.2022) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஞானியார்வளவு,
உடுவில் கிழக்கு சுன்னாகம்.

குடும்பத்தினர்

(cr.37846) (2.6)

# 2 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

**18.04.2022**




**இன்று (18.04.2022) திங்கட்கிழமை**

தனது 2 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்ற

**செல்வன் மு.கோபிசன்**


அண்ணாவை பல்கலையும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ
நயினை நாகபூசணி அம்மன் அருளோடு வாழ்த்துகின்றேன்.

தம்பி இலக்கியன்
கனடா

(cs.19345) (2.6)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 23 . 06 . 1939



ஆண்டவன் அடியில் 02 . 05 . 2018

**அமரர் நடராஜா தெய்வேந்திரன்**

(Hard wairs - உரிமையாளர்)

கல்வியங்காடு

**திதி: துதியை**

ஆண்டுகள் நான்கானதோ
ஆறாது ஐயா உன்பிரிவு
என்னதான் அழுது புலம்பினாலும்
என்னவரை காலனவன் திருப்பித்தரமாட்டான்

வையகத்தில் பிறப்புளதேல் இறப்புமுண்டு
வானவரோடு ஆத்மாசேர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

3 ஆம் கட்டை,
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.

குடும்பத்தினர்

(cs.44139) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் சேய் இறப்பு வீதம் அதிகரிக்கும் அபாயம்!!!

## எச்சரிக்கிறது பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம்

கொழும்பு, ஏப். 18

பொதுச் சுகாதார சேவையை தொடர்ந்து மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளை முறையாகவழங்கத்தவறினால்தொற்று நோய்கள் அதிகரிப்பதுடன் தாய், சேய் இறப்பு வீதம் அதிகரிக்கும் அபாயம் இருக்கின்றது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார, அரசியல் நெருக்கடி காரணமாக இலங்கையில் காலாகாலமாக முன்னெடுக்கப்பட்டு வந்த பொதுச் சுகாதார சேவை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பொது மக்களுக்கான சுகாதார சேவையை முன்னெடுத்துச்செல்லும் சுகாதார அதிகாரிகளுக்கு தேவையான எரிபொருள் விநியோகிக்கப்படுவதில்லை. சுகாதார அதிகாரிகள் அலுவலக வாகனங்களுக்கும் எரிபொருள் இல்லை. மருந்து பொருள்களை பாதுகாத்து வைக்கும் குளிரூட்டப்பட்ட அறைகளுக்கு தேவையான மின்சாரம் இல்லை. அங்கிருக்கும் மின்பிறப்பாக்கிகளுக்கும் தேவையானஎரிபொருள் இல்லை.

இதன் காரணமாக பொதுமக்களுக்கான சுகாதார சேவை முன்னெடுக்க முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் உலகில் சிறந்த சுகாதார சேவையை மேற்கொள்ளும் நாடு என்ற பெயரை தற்போது நாங்கள் இழந்து வருகின்றோம். அத்துடன் எதிர்காலத்தில் பெரும் சுகாதாரப் பாதிப்புகள் ஏற்படும் அபாயம் இருக்கின்றது.

குறிப்பாக தொற்று நோய்கள் அதிகரிக்கலாம், தாய், சேய் இறப்பு வீதம் அதிகரிக்கும் அபாயம் இருப்பதுடன் பாடசாலை சிறுவர்களின் மந்தபோசணை வீதம் அதிகரித்துச் செல்லும் நிலையும் ஏற்பட்டிருக்கின்றது. தாய்மாருக்கான சுகாதார சேவை, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து நோய் கட்டுப்படுத்தும் நடவடிக்கை தடைப்பட்டுள்ளதால் மீண்டும் தொற்று நோய்கள் அதிகரிக்கக்கூடும்.

தற்போது கைவசம் இருக்கும் சுகாதார வளங்களை முறையாக முகாமைத்துவம் செய்து, மக்களின் உயிர்களைப் பாதுகாக்க அதனைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென சுகாதார அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கின்றோன். அதே போன்று பொது மக்களுக்கான சுகாதார தேவையை முன்னெடுப்பதற்குத் தேவையான அத்தியாவசிய வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார். (அ-ஒ-இ)

# மஹிந்த ராஜபக்ச தலைமையில் அமைச்சரவையை ஏற்க முடியாது

## சுதந்திரக் கட்சி விடாப்பிடி

கொழும்பு, ஏப். 18

பிரதமர் பதவியில் மாற்றமின்றி இடம்பெறும் அமைச்சரவை மறுசீரமைப்பு ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.

மக்களின் கோரிக்கைக்கு செவிமடுக்காமல், அமைச்சுப் பதவியை ஏற்பவர்களுக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள் எனவும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. 15 பேருடன் புதிய அமைச்சரவை இன்று பதவியேற்கவுள்ளது.

ஆளுங்கட்சியின் மூத்த உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, சரத் வீரசேகர, பந்துல குணவர்த்தன, காமினி லொக்குகே, மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோர் அமைச்சு பதவிகளை ஏற்கப்போவதில்லை என அறிவித்துள்ளனர்.

இளைஞர்களுக்கும், புதியவர்களுக்கும் வாய்ப்பளிக்கும் நோக்கிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது எனவும் அறிவித்துள்ளனர்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே புதிய அமைச்சரவை நியமனத்தை சுதந்திரக்கட்சி எதிர்த்துள்ளது.

புதிய பிரதமர் தலைமையில் அனைத்துக்கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசு மலர வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. (ஒ-44)

# தமிழ்க் கட்சிகளுடன் சுயாதீன அணி பேச்சு

கொழும்பு, ஏப். 18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உட்பட நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பேசும் கட்சிகளுடன் பேச்சு நடத்துவதற்கு நாடாளுமன்றத்தில் சுயாதீன அணியாகச் செயற்படும் 11 கட்சிகளின் கூட்டணி தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னனி உட்பட 11 கட்சிகளின் பிரதிநிதிகளுக்கிடையிலான விசேட கூட்டமொன்று கொழும்பில் இடம் பெற்றது.

இதன்போது, சமகால அரசியல் நெருக்கடி பற்றியும், அதனைத் தீர்ப்பதற்கான அரசியல் ரீதியிலான வழிமுறைகள் குறித்தும் தமிழ் பேசும் கட்சிகளிடம் பேச்சு நடத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-க-44)

# பொலிஸ் இணையம் மீது நேற்று சைபர் தாக்குதல்

கொழும்பு, ஏப். 18

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் சைபர் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

நேற்றுக் காலை இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் முடங்கியிருந்த இணையத்தளம் பின்னர் நேற்று மாலையே சீராகி, இயங்கத் தொடங்கியது. (அ-ஒ-இ)

### காலியில்...

ஜனாதிபதி செயலகம் எதிரில், காலிமுகத் திடலில் போராட்டக்காரர்கள் தங்கியிருந்து அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். அவர்களுக்கு ஆதரவாக நாடுமுழுவதும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

காலி மாவட்டத்தில், காலி மத்திய பேருந்து நிலையத்தின் முன்பாக கடந்த 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் மாபெரும் கவனவீர்ப்புப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக கொழும்பு காலி முகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள 'கோத்தாகோகம' கிராமத்தின் முதலாவது கிளைக் கிராமத்தையும் காலியில் அமைத்திருந்தனர்.

அந்தப் பகுதியில் கிரிக்கெட் போட்டி இடம்பெறுவதால் 'கோத்தாகோகம' கிராமத்தை அகற்றுமாறு பொலிஸார் கோரியிருந்தனர். ஆனால் போராட்டக்காரர்கள் மறுத்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்றுக்காலை 6 மணியளவில்அங்கு திடுதிடுப்பென புகுந்த பொலிஸார், போராட்டக்காரர்களை இழுத்துப்பிடித்து வெளியே தள்ளிவிட்டு கூடாரத்தை அடித்து, உதைத்து அதை அகற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். இதன்போது போராட்டக்காரர்கள் மிகக்கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினர். அத்துடன் காலி பிரதான பேருந்து நிலையத்தில் குழுமி நின்ற மக்களையும் ஆதரவுக்கு போராட்டக்காரர்கள் அழைத்தனர்.

சிறிது நேரத்திலேயே அங்கு அதிகளவான மக்கள் திரண்டனர்.

சட்டத்தரணிகளும், மனித உரிமை ஆர்வலர்களும் சம்பவ இடத்துக்கு வந்தனர். பொலிஸாருடன் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனையடுத்து தமது நடவடிக்கைகளிலிருந்து பொலிஸார் பின்வாங்கிச் சென்றனர்.

பொலிஸார் சென்ற பின்னர் அதேயிடத்தில் முன்னர் இருந்ததை விட மிகப் பெரிய கூடாரம் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொலிஸாரின் செயற்பாடு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது. (அ-ஒ-இ)

### புலம்பெயர்...

யாக முன்னெடுக்கப்பட்டன. அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரிலும், ஜப்பானிலும், தென்கொரியாவிலும் நேற்றைய நாள் பல ஆயிரம் பேரின் பங்கேற்புடன் போராட்டங்கள் நடத்தப்பட்டன. (ஒ-இ)

### நாடு முழுவதும்...

கடந்த இரண்டு நாள்களாக அவை மீண்டும் தீவிரமாக ஆரம்பமாகியுள்ளன.

ஜனாதிபதியின் மீரிஹான இல்லத்தின் மீதான முற்றுகையுடன் நாடெங்கிலும் பரவலாக போராட்டங்கள் தீவிரமாக வெடித்தன. காலிமுகத்திடலில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அவை அடங்கிப் போயிருந்தன. இந்த நிலையில் புதுவருடத்துக்கு மறு நாள் கடந்த 15ஆம் திகதியிலிருந்து - நாடெங்கிலும் சிறிய அளவிலான போராட்டங்கள் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கொழும்பு - கண்டி பிரதான வீதியின் கலகெஹேன பகுதியில் எரிபொருள் பற்றாக் குறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. (அ-ஒ-5)

### கண்டி முதல்..

கண்டியிலிருந்து கொழும்பு வரை பாதயாத்திரையை ஆரம்பிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகும் யாத்திரை மே முதலாம் திகதி - மே நாள் அன்று கொழும்பில் முடிவுறுத்தப்படவுள்ளது.

மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பலம் கொடுப்பதே நடைபயணப் போராட்டத்தின் நோக்கம் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. (ஒ-க-இ)

### ஜனாதிபதி...

களை வர்ண ஒளிகளால் தெறிக்கச் செய்தனர். மும்மொழிகளிலும் வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

காலிமுகத்திடலில் 'கோத்தாகோகம' கிராமத்தில் தங்கியிருந்து இளைஞர்கள் போராடி வருகின்றனர். ஜனாதிபதி செயலகத்தின் பாதுகாப்பு வேலியின் வெளிப்புறமாக, போராட்டக்களத்திலிருந்து 'புரொஜெக்டர்' மூலம், ஜனாதிபதி செயலக கட்டடத்தில், ராஜபக்ச அரசுக்கு எதிரான தமது போராட்டக்கள வாசகங்களை வர்ண ஒளிகளாகத் தெறிக்க விட்டனர்.

ஜனாதிபதி செயலக பாதுகாப்புப் பிரிவினர் இதனைச் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. திடீரென இவ்வாறு ஜனாதிபதி செயலக கட்டடத்தில் அரசாங்கத்துக்கு எதிரான கோஷங்களின் ஒளியுருக்கள் தோன்றியதால் பரபரப்பு ஏற்பட்டது.

சுதாகரித்துக் கொண்ட பாதுகாப்புப் பிரிவினர், மறைப்பு ஒன்றை எடுத்து வந்து, ஜனாதிபதி செயலக பாதுகாப்பு வேலியின் உட்புறமாக நின்று, 'புரொஜெக்டருக்கு' நேர் எதிரில் நின்று மறைத்தனர். அதன் மூலம் ஜனாதிபதி செயலக கட்டடத்தில் வாசகங்கள் தெறிப்பதை ஓரளவுக்கு தடுத்தனர். (அ-ஒ-5)

### முடிகிறது...

டைந்து விடும் என ஐக்கிய தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

'கடன் யோசனை மூலம் பெறப்படும் எரிபொருளை ஏற்றிய இரண்டு கப்பல்கள் வரவுள்ளன.


அதன் பின்னர் மே மாதம் எரிபொருளை பெற்றுக்கொள்ளும் முறை பற்றி இது வரை தெரியவில்லை. இதனால், மே மாதம் முதல் முழு நாடும் இருளில் மூழ்கும் நிலைமை ஏற்படலாம். ஏற்கனவே கழிவு எண்ணெய்கையிருப்பு முடிந்துள்ளதால், மின்சாரம்துண்டிக்கப்படும்நேரத்தை மேலும் அதிகரிக்க நேரிடும்' எனவும் ஆனந்த பாலித குறிப்பிட்டார். (அ-ஒ-இ)


# பெற்றோல், டீசல் விலை அதிகரிப்பு


கொழும்பு, ஏப். 18

ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 35 ரூபாவாலும், ஒரு லீற்றர் டீசலின் விலை 75 ரூபாவாலும் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











ஜனாதிபதி செயலக கட்டடத்தில் போராட்ட வசனங்கள் ஒளிர்வதையும், அதனை தடுக்க முற்பட்ட பாதுகாப்பு தரப்பினரின் நடவடிக்கையை இறுதி ஒளிப்படத்திலும் காணலாம்.

# மக்கள் வெறுக்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ள மறுக்கும் கோத்தா!

## திஸ்ஸ விதாரண எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.18

அரசாங்கத்திலிருந்து விலகி நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்படும் 41 பேரும் நாடாளுமன்றில் ஒரு குழுவாக அமர்வதற்கு ஆசன ஒதுக்கீட்டை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று சபாநாயகரிடம் கோரவுள்ளோம். அரசாங்கத்தின் செயற்பாடுகள் அதிருப்தியளிக்கின்றன. மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளித்து அரசாங்கம் செயற்படவில்லை- இவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர பொது ஜன பெரமுன கூட்டணியில் இருந்து விலகிய 11 பங்காளிக் கட்சிகளுக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பு தொடர்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் நிர்வாகத்தையும், அவர் தலைமையிலான அரசாங்கத்தையும் நாட்டுமக்கள் ஏன் ஒன்றிணைந்து வெறுக்கிறார்கள் என்பதை ஜனாதிபதி இன்னும் விளங்கிக்கொள்ளவில்லை. மக்களின் வெறுப்பைப் பெற்றுக் கொண்டு ஆட்சியதிகாரத்தை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதற்கு இலங்கை அரசியல் வரலாற்றில் பல சம்பவங்கள் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன.

சமூகக் கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இடைக்கால அரசாங்கத்தை அமைத்து, குறுகிய கால கொள்கை அடிப்படையில் செயற்படுவது அவசியமானதுடன், வெகுவிரைவில் பொதுத் தேர்தலை நடத்தி மக்களின் அபிலாஷைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதையும் ஜனாதிபதிக்கு வலியுறுத்தினோம்.

புதிய பிரதமரின்கீழ் இடைக்கால அரசாங்கத்தை அமைத்து மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்க ஜனாதிபதி அவதானம் செலுத்தவில்லை. மக்களால் வெறுக்கப் படும் அமைச்சரவையையே மீண்டும் நியமிப்பதில் அவர் அதிக அவதானம் செலுத்தியுள்ளார்.

கொள்கைக்கு முரணாக ஆட்சியாளர்கள் செயற்பட்டதன் காரணத்தால் அரசாங்கத்திலிருந்து விலகி நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்படுகிறோம்.

நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்படும் 41 பேர் ஒரு குழுவாக நாடாளுமன்றில் அமர்வதற்கு ஆசனம் ஒதுக்கி தர வேண்டும் என்று சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்க வுள்ளோம்- என்றார். (எ-இ)


**கடை வாடகைக்குத் தேவை**

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதான வீதிகளில் புடைவைகள் விற்பனைக்குத் தகுந்த கடை வாடகைக்குத் தேவை.

076 472 8610, 076 364 9958

**எழுது வினைஞர் தேவை**

நல்லூர் பிரதேசத்தில் வசிக்கும் பெண் சட்டத்தரணி ஒருவருக்கு முழுநேர எழுதுவினைஞர் தேவை. தமிழ் அல்லது ஆங்கிலம் தட்டச்சு தெரிந்திருக்கவேண்டும்.

077 176 8322

**பணிப்பெண் தேவை**

நல்லூரில 2 1/2 வயது குழந்தையை பராமரிக்கவும் வீட்டு வேலைகள் செய்வதற்கும் 45 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.

077 176 8322

**வேலையாள்கள் தேவை**

சண்டிலிப்பாய் A.G.O முன்பாக இயங்கும் புடைவைக் கடைக்கு பெண் வேலையாள்கள் மற்றும் தையல் தெரிந்த பெண்வேலையாளும் தேவை. (சண்டிலிப்பாயை அண்மித்த பகுதியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

077 116 8131

**காணவில்லை**



கோப்பாய் தெற்கில் வசித்து வந்த சின்னக்குட்டி கைலாயபிள்ளை (வயது-80) கடந்த (16.04.2022) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் வட்டர்கலர் சேட்டும், நீலநிற சாரமும் அணிந்தபடி துவிச்சக்கர வண்டியில் புறப்பட்டவர். வீடு திரும்பவில்லை. இவரைக் காண்பவர்கள் தயவு செய்து தகவல் தரவும்.

(சிறிது ஞாபகமறதி உடையவர்)

077 834 9694, 077 031 5274

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

சுண்டிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி. A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன. 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. நல்ல தண்ணீர் கட்டுக் கிணற்றுடன் பயன்தரும் தென்னைகள் உள்ளன.

பார்வையிடும் நேரம்

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை,

ஒரு பரப்பின் விலை 450000.00

(தரகர் தேவையில்லை)

ஜெயம்:-

077 814 7389, 077 241 7589




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.